www.tamilarangam.net


# களத்தில்




எமது போராட்டம் தேச விடுதலையை மட்டும் நோக்காக் கொண்டதல்ல. தேசத்தின் விடுதலையுடன் சமூக விடுதலையையும் இலக்காகக் கொண்டே நாம் போராடி வருகின்றோம். சமூக விடுதலை என்ற எமது குறிக்கோளில் பெண் விடுதலை பிரதான இடத்தை வகிக்கின்றது. சகல ஒடுக்குமுறைத் தளைகளிலிருந்தும் தமிழீழப் பெண்ணினம் விடுதலை பெறவேண்டும். அப்பொழுதே சமூக விடுதலையானது அர்த்தமுடையதாக முழுமை பெற முடியும் என்பது எமது நிலைப்பாடு.

*தமிழீழத் தேசியத் தலைவர்*
*மேதகு வே. பிரபாகரன் அவர்கள்*


(12.08.1999) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கிவரும் செய்தித்தாள் (192) அன்பளிப்பு : 60 p


# சிங்களப் படைகள் வெளியேறட்டும்!

## ஐ.நா.முன் தமிழர்கள் எழுச்சிப் பிரகடனம்

* மக்கள் ஆணையிட்டு ஐ.நா. முன்றலில் தமிழீழத் தேசக்கொடி ஏற்றினர்
* அலங்கார ஊர்திகள் தமிழீழ மக்கள் படும் துன்பங்களை விளக்கின
* கலையும் இசையும் தமிழீழ மக்கள் துயரவாழ்வை பிரதிபலித்தன
* ஜெனிவா வீதிகள் திரண்டெழுந்த பல்லாயிரம் மக்களால் நிறைந்தன

'21ஆம் நூற்றாண்டில் தமிழீழத்தை நோக்கி' என்ற தலைப்பில் தமிழீழ மக்களின் எழுச்சிப் பேரணி ஒன்று 09.08,99 அன்று பிரமாண்டமான முறையில் இடம் பெற்றது. ஐரோப்பாவின் பலபாகங்களில் இருந்தும் தேச நேசத்துடனும் இரத்த பாசத்துடனும் தமிழீழ மக்கள் ஜெனிவா நகரில் குமியத் தொடங்கினர். தொடருந்துகள் பேருந்துகளில் வந்திறங்கிய தமிழீழ மக்களின் முகங்களில் எல்லாம் தங்கள் தேசத்தின் தேச மக்களின் இன்னல்களை சர்வதேச உலகிற்கு எடுத்துரைத்து நீதி கோரும் சத்தியவெறி தாண்டவமாடிக் கொண்டிருந்தது. சரியாக 2.45 மணிக்கு தமிழீழ மக்கள் பேரணி ஐக்கிய நாடுகள் சபை முன்றலை நோக்கி நகரத் தொடங்கியது. தொடர்ச்சி 8ம் பக்கம்



**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

www.tamilarangam.net



# ஐந்தாண்டு ஆட்சி தரும் படிப்பினை

சந்திரிகாவின் ஐந்தாண்டு ஆட்சி தமிழர்களைப் பொறுத்த மட்டில் சமாதானத் தீர்வினை சிங்கள அரசாங்கங்கள் என்றுமே ஏற்படுத்த மாட்டாது- போராட்டத்தின் வெற்றி மூலமே தமிழர்களின் வாழ்வு நிலைக்க முடியும் என்ற நிலைப்பாட்டை தெட்டத் தெளிவாக்கியுள்ளது. தமிழர்களாகிய நாம் என்றுமே சமாதானமான முறையில் எமது சின்னஞ்சிறு தமிழீழத் தாயகத்தில் பாதுகாப்பான அமைதியுடன் வாழ்வதையே விரும்புகின்றோம். இந்த உரிமை எங்களின் பிறப்புரிமை. எங்களின் உயிர் வாழ்வதற்கான அடிப்படைப் பிறப்புரிமையை மறுத்து இன அழிப்பு, இனத்துன்புறுத்தல் போன்ற மனிதாயத்திற்கு எதிரான சர்வதேச குற்றச் செயல்களை செய்வதன் மூலம் சிங்கள சிறீலங்காவின் ஒரு பகுதியுள் வாழும் மக்களாக தமிழர்களை உலகிற்கு காட்டி எங்களின் தமிழீழத் தேசத்தில் நிரந்தரமான ஆக்கிரமிப்பொன்றை நிலைப்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதே சிங்கள பௌத்த பேரினவாதத்தின் நோக்கும் போக்குமாகும். காலனித்துவம் விலகிய நாள் முதல் சிங்கள பௌத்த பேரினவாதம் கண்டு வந்த இந்த தமிழர்களின் தாயகத்தை தமதாக்க வேண்டுமென்ற கனவே இலங்கைத் தீவில் உயிர்வாழ்வதற்கு உடமைகளைப் பேணுவதற்கு சுதந்திரத்தைப் பேணுவதற்கு போராட வேண்டிய நிலைக்குத் தமிழர்களைத் தள்ளியது. இதனால் தமிழீழ மக்கள் என்னும் தனியான தேசியத்தன்மையுடன் காலனித்துவத்தால் கைப்பற்றப்பட்ட தங்கள் தமிழீழத் தேசத்தை மீளவும் விடுவித்து அதில் தங்களது ஆட்சியில் தங்களுக்கான பாதுகாப்பான அமைதி வாழ்வை உருவாக்க தமிழர்கள் தங்கள் சுயநிர்ணய உரிமையினைப் பிரயோகித்து நடாத்தி வரும் தேசிய விடுதலைப் போராட்டமே தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமையில் நடைபெற்று வரும் ஈழப்போர்கள். இந்த போர்கள் தமிழ் மக்கள் மேல் சிங்கள சிறீலங்காவால் திணிக்கப்பட்டவை. சந்திரிகா 1994இல் தேர்தலுக்கு மக்கள் முன் வரும் பொழுது முன்னைய சிங்கள அரசாங்கங்கள் செய்த தவறுகளே தமிழர்களை போராடும் நிலைக்கு தள்ளியது. ஆதலால் யுத்தத்தை நிறுத்தி பேச்சுவார்த்தைகள் மூலம் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பேன் என மக்களுக்கு வாக்குறுதி அளித்தார். மக்களும் தேர்தல் மூலம் அதற்கு குடியொப்பமளித்தனர்.

ஆனால் சந்திரிகா பதவியேற்றதுமே மக்களின் ஆணையை நிராகரித்து இராணுவத் தீர்வு மூலம் தமிழீழ மக்களின் அரசு நோக்கிய அரசாக செயற்பட்டு வரும் தமிழீழ விடுதலைப் புலிகளை அழித்தொழித்து தமிழீழத் தேசத்தின் தேசிய பாதுகாப்பு ஆற்றலை நொறுக்கி தமிழீழம் ஒரு தேசமாக நிலைப்பதற்கு உள்ள தன்மைகளை அழிக்கும் நோக்கில் தமிழீழத்தின் உட்கட்டுமானங்களை நாசமாக்குவதற்கான அரசியல் செயல் திட்டங்களை இராணுவத்தின் மூலம் நடைமுறைப்படுத்த முற்பட்டார்.

இதுவே கடந்த ஐந்தாண்டுகளாக சந்திரிகா அரசில் தமிழீழ மக்கள் அனுபவிக்கும் யுத்தக் கொடுமைகளின் மூலகாரணி. சந்திரிகா சமாதானம் என்ற போர்வையை தனது இராணுவ நலன்பேணும் பேச்சுவார்த்தை முன் முயற்சிகளுக்ும் - தனது தமிழீழ மக்கள் மீதான அப்பட்டமான ஆக்கிரமிப்பு யுத்தங்களுக்கும் போர்த்தி அதனை சர்வதேச நாடுகள் அமைப்புக்களுக்கு நியாயப்படுத்தி வருகின்றார். ஆனால் சந்திரிகா நடைமுறையில் தமிழர்களையும் தமிழர்களின் தாயகத்தின் உட்கட்டுமானங்களையும் அழிப்பதையே தனது அரசாங்கத்தின் இலக்காகவும் கடமையாகவும் நிறைவேற்றி வருகின்றார். ஆதலால் அவர் தமிழ் மக்களுக்கு யுத்தத்தால் ஏற்படும் எந்தக் கொடுமைகளையும் துன்பங்களையும் ஏறெடுத்தும் பார்க்காதவராகவே கடந்த ஐந்தாண்டுகளாக செயற்பட்டு வந்துள்ளார். இந்த போக்கு தரும் உற்சாகத்தில் சிறீலங்காப்படைகள் தமிழர்களையும் தமிழர் தேசத்தையும் தம் விருப்புக்கேற்றபடி சூறையாடியும் இச்சைகளுக்கு ஏற்றபடி வதைத்தும் அழித்தும் வருகின்றனர்.

இதனால் சந்திரிகாவின் ஐந்தாண்டு ஆட்சி தமிழர்களுக்கும் அவர்களது தேசத்திற்கும் முதன்மைத் தேவையாக இருப்பது பாதுகாப்பு என்ற புதிய நிலையினைத் தோற்றுவித்துள்ளது. தமிழர்களுக்கு அரசியல் தீர்வு என்பது அவர்கள் எத்தகைய பாதுகாப்பான ஆட்சியில் வாழப்போகின்றார்கள் என்பதேயாகும். இந்தப் பாதுகாப்பான ஆட்சியினை எந்த சிங்களப் படைகளும் சிங்கள அரசியல் சாசனங்களும் அவர்களுக்கு வழங்க மாட்டாது என்பதற்கான அனுபவ ஆட்சியாக சந்திரிகாவின் ஐந்தாண்டு கால ஆட்சி அமைந்துள்ளது. தமிழ் மக்களின் நாளாந்த பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை விளைவித்த பூநகரி இராணுவ முகாமை அகற்றும்படி கேட்டமையே பேச்சுவார்த்தை முன் முயற்சிகள் தடைப்பட முக்கிய காரணியாகியது.

தமிழர்களுடைய பாதுகாப்பான வாழ்வுக்கு அடிப்படையாக உள்ள அவர்களின் வீடு வாசல்களை விட்டு அவர்களை விரட்டி அடித்தமையும் அவர்களது வீடு வாசல்கள் எங்கும் ஆயுதப்படைகளை நிலை கொள்ள வைத்தமையுமே சந்திரிகா தமிழர்களுக்கு வழங்கிய சமாதானத்தீர்வாக உள்ளது. அகதிகளாக ஆலயத்தில் தஞ்சம் அடையும் படி சந்திரிகாவின் படையினரே கட்டளையிட்டு விட்டு அந்த நவாலி சென். பீற்றர்ஸ் ஆலயத்தில் குண்டு வீசி கொன்ற இனப்படுகொலைக்கு சந்திரிகா பெயரளவுக்குக்கூட மன்னிப்புக்




கேளாமல் விட்டமை சந்திரிகா எதனை சாதிக்க நினைக்கின்றார் என்பதை தெளிவாக்கியது. நாகர் கோயிலில் பள்ளியில் படித்துக் கொண்டிருந்த பிஞ்சுக் குழந்தைகள் மேல் குண்டு வீசிக் கொன்ற கொடுமைகள் முதல் இன்று வன்னியில் உணவை மருந்தை வழங்காது சந்திரிகா தடுத்து வரும் கொடுமைகள் வரை எத்தனையோ எத்தனையோ கொடுமைகளை தமிழ் மக்கள் அனுபவித்து விட்டனர். சந்திரிகாவின் ஐந்தாண்டுகளில் பாலியல் வன்முறைகளுக்கு தமிழ்ப் பெண்கள் பள்ளி மாணவிகள் பகிரங்கமாக உட்படுத்தப்பட்டனர். பலர் கொலைசெய்யவும் பட்டனர். மனிதப் புதை குழிகளில் தமிழர்களை உயிருடனும் கொன்றும் போடும் அரசியல் நாகரிகம் சந்திரிகா காலத்து பிரசவம். இவை எல்லாம் தமிழர்களுடைய முதல் தேவையாக அவர்களது பாதுகாப்பை மாற்றியுள்ளமை கண்கூடு.

தமிழ் மக்களுடைய பாதுகாப்புக்கு அவர்களே இணைந்து கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகளைத் தமிழ் மக்களை விட்டு தனிமைப்படுத்த வேண்டும் என்ற நோக்கிலேயே தனது ஆயுதப் படைகளை தமிழர்களின் வீடுகள் வாசல்கள் எல்லாம் கொட்டிக் குவித்து வைத்து வேடிக்கை பார்க்கின்றார் சந்திரிகா. இந்த படைகளினால் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு மேலும் மேலும் ஆயுத வழங்கல்களைத்தான் செய்ய முடிந்ததே தவிர தமிழீழ விடுதலைப் புலிகளின் தேசிய விடுதலைப் போராட்ட ஆற்றலை அசைக்க முடியவில்லை என்பதே நடைமுறை யதார்த்தம். சிறீலங்கா படைகளால் மட்டுமல்ல எந்த சக்தியினாலுமே தம் உயிரை தம் மக்களுக்கும் தேசத்திற்கும் கொடுக்க தயாராக உள்ள விடுதலைப் புலிகளை அசைக்க முடியாது. அவர்கள் பிறர் மண்ணைக் கேட்கவில்லை. தம் சொந்த மக்களின், மண்ணின் விடுதலையையே கேட்கின்றனர். அந்தக் கோரிக்கை நிறைவேறும் வரை தமிழீழ விடுதலைப் புலிகளாக தமிழ் மக்கள் மேலும் மேலும் மாறிக்கொண்டிருப்பதை யாராலும் மாற்ற முடியாது என்பதையே சந்திரிகாவின் ஐந்தாண்டு சாக்காட்டு ஆட்சி நிரூபித்துள்ளது. பல்லாயிரம் படை கொண்டு நவீன ஆயுதங்கள் தரித்து நடாத்திய ஜெயசிக்குறுய் இன் தோல்வி இந்த மகத்தான உண்மையின் சாட்சியாக உள்ளது.

தம்மையே தமிழ் மக்களுக்காக அர்ப்பணிக்கும் மனிதநேயமும் இலட்சியத்தில் உருக்குறுதியும் கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் என்றுமே சமாதானத்திற்கு எதிரிகளல்ல. சிறீலங்கா, தமிழீழ மக்களின் பாதுகாப்பான அமைதியை உறுதி செய்யக் கூடிய எந்த மாற்றுத் திட்டத்தையும் முன் வைத்தால் அதனை பரிசீலிக்க ஆயத்தமானவர்களாகவே சந்திரிகா ஆட்சியுடன் தங்கள் உறவை ஆரம்பித்தனர். ஆனால் சந்திரிகா இந்த சமாதானப் போக்கை பலவீனமாகக் கருதி தாம் நினைத்தவாறு தமது இராணுவ நலன்களை சமாதானப் போர்வையில் நிறைவேற்றுவதை விடுதலைப் புலிகள் என்றுமே அனுமதியார் என்பதே சந்திரிகா கடந்த ஐந்தாண்டு ஆட்சியில் படித்துள்ள பாடம். சந்திரிகா அரசு தோற்றுவித்துள்ள புதிய ஆக்கிரமிப்புக்கள் தமிழ் மக்களை இராணுவம் சுற்றி நிற்க தம் நாளாந்த வாழ்வை வாழும் நெருக்கடி நிலை ஒன்றை தோற்றுவித்துள்ளது. இந்த நெருக்கடி நிலை நீக்கப்பட்டு மக்கள் நாளாந்த வாழ்வின் பாதுகாப்புத் தன்மை உறுதி செய்யப்படும் வரை பேச்சுவார்த்தை என்பதே அர்த்தமற்றதாக காணப்படுகிறது. ஏனெனில் எந்த பேச்சு வார்த்தைக்கும் ஆக்கிரமிப்பு அற்ற நிலை மிக முக்கியமான ஒன்று. இதனை சந்திரிகா செய்யாத வரை படைகளை விரட்டி அடிப்பதற்கான தேவைகளே முதன்மைப்படுத்தப்படும் என்பது பகிரங்கமான உண்மை. கடந்த கால அனுபவங்களின் படி தமிழீழ மண்ணில் ஆக்கிரமிப்பு படையினால் நீண்ட காலத்திற்கு நிலைபெற முடியாது என்பதும் உறுதியாக்கப்பட்டுள்ளது. முல்லைத்தீவு இராணுவ முகாம் முதல் கிளிநொச்சி இராணுவ முகாம் வரை எத்தனையோ உதாரணங்கள் இதற்கு உண்டு. ஆதலால் சந்திரிகா படைகளை விலக்கி பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கக் காட்டும் ஒவ்வொரு தயக்கமும் அவரின் ஒவ்வொரு இராணுவ நிலைகளின் அழிவுக்கும் அவர் விதிக்கும் காலக்கெடுவாக மாறிக் கொண்டிருக்கிறது.

தற்பொழுது தேர்தல் காற்று சிறீலங்காவில் வீசத் தொடங்கியிருப்பதால் புதிய புதிய தந்திரங்கள் தமிழ் மக்களின் வாக்குகளை கவர முன்வைக்கப்படும் என்பது எதிர்பார்க்கப்படும் ஒன்று. ஐக்கிய தேசிய கட்சி கூட இதில் முன்னணி வகிக்கும் என்பதில் ஐயமில்லை. ஆனால் அதே ஐக்கிய தேசிய கட்சி கிழக்கு மாகாண முன்னாள் இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் லக்கி அல்கமவை தான் ஆட்சிக்கு வந்தால் எப்படி யுத்தத்தை வெற்றிகரமாக நடத்தலாம் என ஆராய இப்பொழுதே தனியார் இராணுவ ஆலோசகராக நியமித்துள்ளமை எந்தச் சிங்கள கட்சி ஆட்சிக்கு வந்தாலும் யுத்தத்தையே தொடரப்போகிறது என்பதற்கு கட்டியம் கூறுகிறது. யுத்தத்தை செய்ய விரும்புகின்ற எவரும் அந்த யுத்தத்தில் தாம் வெற்றி பெறுவதைப் பற்றியே சிந்திப்பார்கள். இந்த உண்மையை மனதில் கொண்டு பார்க்கையில் எந்தச் சிங்கள அரசாங்கமும் யுத்தத்தின் வெற்றிக்காக தமிழ் மக்களை பலிகொள்வதையே தொடர்வார்கள். இதனை தடுப்பதற்கு தமிழ் மக்களாகிய நாம் எமது சுயநிர்ணய உரிமைப் போராட்டமாம் தமிழ்ழத் தேசிய விடுதலைப் போராட்டம் வெற்றிபெற விடுதலைப் புலிகளுக்கு எம்மாலான அனைத்தையும் செய்ய வேண்டும். தமிழீழ விடுதலைப் புலிகளின் வெற்றியிலேயே தமிழ் மக்களின் எதிர்கால வாழ்வு தங்கியுள்ளது. இதுவே சந்திரிகாவின் ஐந்தாண்டு சாக்காட்டு ஆட்சி நமக்கு தரும் செய்தி.






| | | | | | |
|---|---|---|---|---|---|
| AUSTRALIA<br>TCC<br>P O Box 375,<br>Preston,<br>Victoria 3072. | CANADA<br>WTM<br>64 Eaton Avenue,<br>Toronto,<br>Ontario M4J 2Z5. | DENMARK<br>LTTE<br>P.O.Box 47,<br>7400 Herning. | FRANCE<br>TCC<br>341 Rue Des<br>Pyrenees,<br>75020 Paris. | GERMANY<br>TCG<br>Postfach 340251,<br>51624 Gummersbach. | ITALY<br>TCC<br>Via Vinsenzo Di Pavia No14,<br>90138 Palermo. |
| NETHERLANDS<br>TCC<br>P.O.Box 18600,<br>2502 EP Den Haag. | NORWAY<br>TCC<br>P.O.BOX 1699 Vika,<br>0110 Oslo. | SWITZERLAND<br>WTTC<br>Joses Str - 110,<br>8005 Zurich. | SWEDEN<br>TCC<br>Glomminge Grand-25,<br>3rd Floor,<br>16362 Spanga. | UNITED KINGDOM<br>UTO<br>Eelam House,<br>202 Long Lane,<br>London SE1 4QB. | U.S.A<br>W.T.C.C<br>170-10 Cedarcroft Road<br>Suite 1-L, Jamaica<br>New York 11432. |





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net



# சந்திரிகாவின் பரப்புரைப் பொதி

## — அனைத்துலகப் பரப்புரைக்கான நுட்பமான வித்தை —

சிறீலங்காவின் ஆளும் கூட்டணி அரசு யூலை23 நள்ளிரவு வரை சனாதிபதி சந்திரிகா தலைமையில் கூடி விவாதித்தது. எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி பட்டியல் போட்டுக் காட்டும் சந்திரிகாவின் நிறைவேற்றப்படாத பொய் வாக்குறுதிகளும், ஜே.வி.பி. போன்ற கட்சிகளின் சனாதிபதி முறைக்கு எதிரான பரப்புரைகளையும் எதிர்கொள்வதற்கான தந்திர உபாய ஆலோசனைகளின் முடிவில் தற்போதைய சிங்கள அரசமைப்பை திருத்துவதற்காக தயாரிக்கப்பட்டது என கூறப்படும் சட்ட வரைவை பாரளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் போவதாக சந்திரிகா அறிவித்தார்.



இச் சட்ட வரைவை தமிழர்களுக்கும் உலகிற்கும் தீர்வுப் பொதியாகவும் சிங்களவர்களுக்கு சனாதிபதி ஆட்சிமுறையை மாற்றி அதிகாரத்தை சகலருக்கும் (தமிழர்களுக்கு மட்டுமல்ல) பரவலாக்கும் திட்டமாகவும் அறிமுகப்படுத்தி வந்த சந்திரிகா இதனை பாரளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் போவதாக அறிவித்தமையை கொழும்பை மையமாக கொண்டியங்கும் செய்தி ஊடகங்கள் பரபரப்பாக்கின. இத் தீர்வுப் பொதியின் கூட்டுத் தந்தை நீலனின் சாவைத் தொடர்ந்து உலக பரப்புரை இலாபத்திற்காக கூக்குரல் இட்டு பொதியை சந்திரிகா சுமந்தார்.

இது தொடர்பான செய்திகள் வந்த அதே காலத்தில் கொத்தலாவெல இராணுவக் கல்லூரியில் புதிய பட்டதாரிகளுக்கான பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்ட சந்திரிகா, அதிகாரப் பரவலானது இனக் குழுக்களை (தமிழர்களை) உள்வாங்கவும் புவியியல் ரீதியாக ஒதுக்கப்பட்ட பிராந்தியங்களை உள்வாங்கவும் அவசியமானது என கூறினார். மேலும் ஒரு நாடு ஒரு தேசிய இனக் கோட்பாடே (One State One Nation formula) நாடு என்பதற்கான சட்ட அரசியல் மூல வியாக்கியானம் எனவும் எனினும் ஆக்கபூர்வமான பாத்திரத்தை வகிப்பதற்காக இது வழிவிட முயல்கின்றது எனவும் புதிய இராணுவ அதிகாரிகளுக்கு சிங்கள நாடு பற்றியும் தமிழ் இனக்குழு பற்றியும் விளக்கம் கொடுத்தார். மேலும் இராணுவத்தின் வீரம் தீரம் பற்றி உரையாற்றிய சனதிபதி, பயங்கரவாதிகள் போர் மற்றும் இராணுவ நடவடிக்கை என்ற மட்டத்தில் மட்டுமே செயற்படுவதாக கூறினார் (ஆதாரம்: The Daily Newss 27.07.99).

இவ் அறிவிப்புக்கள், பிரகடனங்கள் என்பன பரப்புரைக்கான எல்லைகளை சென்றடைந்த பின்னர் தனது உள்நாட்டு அரசியல் எதிரியான ரனிலையும் தமிழர்களின் தேசிய இலக்கை இறுகப் பாதுகாக்கும் புலிகளையும் காரணம் காட்டி தன்னால் புதிய சட்ட வரைவை கொண்டுவர முடியாதுள்ளதாக சந்திரிகா அறிவிக்கத் தொடங்குகின்றார்.

இவ் அறிவிப்புகள் அனைத்துமே திட்டமிடப்பட்ட இனவாத திட்டங்களாகும். போரை மூர்க்கமாக நடாத்தி தமிழர்களின் தேசிய இலட்சியத்தை அழித்துவிடலாம் என நம்பிய சந்திரிகா அரசு போரின் இலக்கு அடையப்படாததால் அதற்கு முண்டு கொடுப்பதற்கான அரசியல் பரப்புரை வித்தைகளுக்கு நுட்பமான இராஜதந்திர- இனவாத சாயங்கள் பூசி வருகின்றார்.

*சந்திரிகாவையும் சிங்கள அரசையும் பொறுத்தவரை தீர்வுக்குரிய விடயம் தமிழர்களின் உரிமைகள் பற்றிய விடயங்கள் அல்ல. தமிழர்களின் திம்பு தீர்மானங்களை தீர்வுப் பொதி ஆராயவில்லை. மூன்றாம் தரப்பு மத்தியத்துவத்துடன் இனச்சிக்கலை ஆராய்வது தொடர்பான எமது தேசியத் தலைவரின் கருத்துக்களுக்குப் பதிலளிக்கப்படவில்லை. மாறாக தமிழர்களின் கோரிக்கைகளை வெறும் அதிகார பரவலாக்கத்துடன் தீர்ப்பதாக சந்திரிகா கூறுவது பரப்புரைகளுக்கான ஒரு இடைவெளியை சிறிலங்காவுக்கு ஏற்படுத்திக் கொடுக்கவேயாகும்.*

எனினும் பொதி ஒரு சிங்கள இனவாத அமைப்பை பாதுகாப்பதற்கான திட்டம் என்பதை கொத்தலாவெல இராணுவக் கல்லூரியில் சந்திரிகா அப்பட்டமாக கூறியுள்ளார்.


தமிழர்களுக்கும் அம்பாந்தோட்டை போன்ற பின்தங்கிய பிரதேச மக்களுக்கும் அதிகாரத்தை பிரித்தளித்து மையமாக கொழும்பில் முக்கிய அதிகாரங்களை கொண்ட அரசை நிறுவும் பொதியை தமிழ்மக்களும் புலிகளும் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் என்பதை சந்திரிகா அறிவார். பாரளுமன்றத்தில் எதிர்கட்சியான ஐ.தே.க இதனை தன் சுய இலாபங்களுக்காக எதிர்க்கும் என்பதையும் சந்திரிகா அறிவார். ஆனால் தனது வெளிநாட்டுப் பரப்புரைகளுக்காக பொதியை சாகவிடாது சந்திரிகா பாதுகாக்கின்றார்.

சந்திரிகாவையும் சிங்கள அரசையும் பொறுத்தவரை தீர்வுக்குரிய விடயம் தமிழர்களின் உரிமைகள் பற்றிய விடயங்கள் அல்ல. தமிழர்களின் திம்பு தீர்மானங்களை தீர்வுப் பொதி ஆராயவில்லை. மூன்றாம் தரப்பு மத்தியத்துவத்துடன் இனச்சிக்கலை ஆராய்வது தொடர்பான எமது தேசியத் தலைவரின் கருத்துக்களுக்குப் பதிலளிக்கப்படவில்லை. மாறாக தமிழர்களின் கோரிக்கைகளை வெறும் அதிகார பரவலாக்கத்துடன் தீர்ப்பதாக சந்திரிகா கூறுவது பரப்புரைகளுக்கான ஒரு இடைவெளியை சிறிலங்காவுக்கு ஏற்படுத்திக் கொடுக்கவேயாகும். போரின் தீவிரத்தாலும் பொருளாதார நெருக்கடிகளாலும் சிக்கலை எதிர்கொள்ளும் அரசும் அதனது இராஜதந்திர நிபுணர்களும் தமது செயற்பாட்டிற்கான உந்துதலைப் பெறுவதற்கு இவ் அறிவிப்புக்களையே நம்பி உள்ளனர்.

சந்திரிகாவின் அறிவிப்பானது உடனடியாக ஊடகங்கள் ஊடாகவும் படிப்படியாக இராஜதந்திர வழிகள் ஊடாகவும் சர்வதேச சமூகத்திற்கு சொல்லப்படும். இதன் மூலம் போரிற்கான நியாயங்களை கற்பிக்க முயலும் அரசு தனது மனிதவதை மற்றும் போர்க் குற்றங்களை மறைப்பதற்காக தீர்வுப் பொதி பற்றியதான செய்திகளை பயன்படுத்தும்.

எனினும் இத் தேவைகளுக்கு புறம்பாக தமிழர்களின் பிரதான கோரிக்கையான தேசிய இனம் மற்றும் தாயகம் பற்றிய கேள்விகளைப் புறம் தள்ளும் பொதியை இராணுவத்திற்கு அறிமுகப்படுத்திய சனாதிபதி, நாடு பற்றிய தனது வியாக்கியானங்கள் மூலம் தேசிய இனமாக சிங்களத்தையும் சிறுபான்மைக் குழுக்களாக எம்மையும் நாகரிகமாக பிரகடனப்படுத்தியமை சிங்கள பேரினவாத அமைப்பின் தீவிர உள்நோக்கத்தை புலப்படுத்துகின்றன.

தமிழர்கள் நாடு பற்றிய தமது தெளிவான நிலைப்பாட்டை திம்பு கோரிக்கைகள் ஊடாக பிரகடனப்படுத்தி உள்ளனர். அதிகாரப் பரவலாக்கம் பின்தங்கிய சிங்கள மாவட்டங்களுக்கு சிறந்தன. ஆனால் தமிழர்களின் தேவையும் கோரிக்கையும் தேசிய இனம் பற்றியதும் நாடு பற்றியதுமாகும்.



சந்திரிகா அரசும் இராணுவமும் தமது கூட்டு போர் திட்டத்தின் ஒரு பகுதி திட்டமாகப் பார்க்கும் பொதியை தமிழர்கள் தெளிவாக அறிவர். அதன் ஆயுட்காலம் போரின் தேவைகளை ஒத்தது என்பதையும் தெளிவாக அறிவர். காலத்திற்கு காலம் பொதியை பரப்புரை சாதனமாக சந்திரிகா பயன்படுத்துகையில் போர் அதன் தீர்க்கமான பாதை ஊடு நகர்கின்றது. முன்னிலும் பலமான அரசியல் பலத்துடனும் இராணுவ பலத்துடனும் தமிழர்கள் இன்று பொதியின் நோக்கத்தை எதிர்கொள்கின்றனர். தமிழர்களால் இன்று தமது நிகழ்ச்சித் திட்டத்தை தெளிவாக வடிவமைக்கவும் அமுல்படுத்தவும் முடியும் என்பதனால் பொதியின் நோக்கம் ஐ.தே.க. விற்கு எதிரான சந்திரிகாவின் குறுங்கால நெடுங்கால கனவுகளை மட்டுமே நிறைவேற்றலாம். தமிழர்கள் போரின் போக்கை மேலும் மாற்றும் போது பொதியின் பரப்புரை நோக்கு செல்லுபடியற்றதாகும்.

நாதன்

www.tamilarangam.net



# பெருமளவு இரத்தம் சிந்தப்படும் வன்னிச் சமர்க் களம்

வன்னிச் சமர்க்களம் கடந்த இரண்டரை ஆண்டுகளாகச் சூடாகவுள்ளது. மூன்றாம் கட்ட ஈழப்போரின் பெரும் பகுதி அங்கு நடந்து கொண்டிருப்பதே அதற்குக் காரணமாகும். சிறீலங்கா இராணுவம் மேற்கொண்டுள்ள பாரிய படைநகர்வுகள், விடுதலைப் புலிகள் இராணுவப் படைத்தளங்கள் மீது நடத்திய பெரும் தாக்குதல்கள், இராணுவ நகர்விற்கு எதிராக புலிகள் மேற்கொண்ட பதிலடி நடவடிக்கைகள் என இக்கால கட்டத்தில் பெரும் மோதல் சம்பவங்கள் வன்னிப் பிராந்தியத்தில் இடம் பெற்றுள்ளன. இவை சிறீலங்கா இராணுவ வரலாற்றிலும் சரி, தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றிலும் சரி, முக்கியத்துவம் வாய்ந்தவை என்பதில் கேள்விக்கு இடம் இருக்கப் போவதில்லை.

இவ்வாறு வன்னிச் சமர்க்களம் முக்கியத்துவம் பெறுவதற்கு சண்டையில் ஈடுபட்டுள்ள இரு தரப்பினருக்கும் இப்பிரதேசம் வகிக்கும் முக்கியத்துவமும், அவர்களின் நோக்கங்களும் காரணமாயுள்ளன. இதில் சிறீலங்கா இராணுவத் தரப்பின் எதிர்பார்ப்பை பொறுத்து.

1. தமிழீழ பிரதேசத்தில் கணிசமான பங்கு வகிக்கும் நிலப்பரப்பைக் கொண்டுள்ள இப் பிரதேசம் - புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பரந்த நிலப்பகுதியாகவும், பலமான பகுதியாகவும் உள்ளமையால் புலிகளை வெற்றி கொள்ள இப் பிரதேசம் அவசியமாகிறது.
2. தமிழ்த் தேசியத்தின் மையமாகத் திகழும் யாழ். குடா நாட்டின் முற்றம் போன்று அமைந்துள்ளதோடு, குடா நாட்டிற்கான தரைவழிப்பாதைக்கும் தேவையான முக்கிய பிரதேசமாகவும் உள்ளது.
3. விடுதலைப் புலிகளை வன்னியில் தோற்கடிப்பதினால் - அவர்களின் பலம் வெகுவாகக்குறைவடையும். இதனால் புலிகள் அணிதிரண்டு பெரும் தாக்குதல்களை நடத்தும் சக்தியை இழந்துவிடுவர்.

**ரமணன்**

இதேசமயம் விடுதலைப் புலிகளின் பார்வையில்

1. தமது ஸ்திரத்தன்மையைப் பேணுவதற்கு வன்னிப் பிரதேசத்தை இயலுமானவரை வைத்துக் கொள்ளுதல் அவசியம்.
2. சிறீலங்கா இராணுவத்தை எதிர்கொள்வதற்கு ஏற்ற பரந்த பிரதேசம் என்பதினால் யுத்தத்தை தொடர்ந்து நடத்தி இராணுவத்திற்கு பேரிழப்பை ஏற்படுத்துவதற்கு ஏற்ற பௌதீகச் சூழ்நிலை கொண்டது.
3. யாழ். குடாநாட்டில் நிலை கொண்டுள்ள சிறீலங்கா இராணுவத்தின் மீதான அழுத்தத்தைத் தொடர்ந்து வைத்துக் கொள்வதற்கான வகையில் வன்னி ஊடான விநியோக வழி திறப்பதை தடுத்து நிறுத்துதல்.

இந்த ரீதியில் வன்னிப் பெரும் நிலப்பரப்பானது இரு தரப்பினருக்கும் முக்கியத்துவம் பெற்றதாகவும், அவசியமானதுமாகிறது. இதன் விளைவே இப் பிரதேசம் பெரும் சமர்கள் இடம்பெறுவதற்குக் காரணமாகியுள்ளது. ஆகையினால், இராணுவம் இப் பிரதேசத்தை தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்கென தனது முழுவளத்தினையும் திரட்டிப் பெரும் முயற்சியில் ஈடுபடுகையில், விடுதலைப் புலிகள் இயக்கமோ இப் பிரதேசத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்கும், இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதிகளை விடுவித்துக் கொள்வதிலும் முழுக்கவனம் செலுத்தி வருகின்றது.

சிறீலங்கா இராணுவத்தைப் பொறுத்து இப் பிரதேசத்திற்கு அது கொடுக்கும் முக்கியத்துவமானது இறுதிப் பெரும் போர் ஒன்று நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என்பதன் அடிப்படையிலானதாக உள்ளது. இதனை அடியொற்றியே யுத்தம் முடிவடைவதற்கான காலக் கெடுக்களையும் அரசாங்கத் தரப்பினர் விடுத்து வந்துள்ளனர்.

விடுதலைப் புலிகள் இயக்கமோ வன்னிச் சமர்க் களத்தினை சிறீலங்கா இராணுவத்தினின் முதுகெலும்பை உடைப்பதற்குக் கிடைக்கப் பெற்றுள்ள சந்தர்ப்பமாகக் கொண்டுள்ளனர். பரந்துபட்ட வன்னி நிலப்பரப்பை சிறீலங்கா இராணுவத்தின் புதைகுழியாக மாற்றி விட முடியும் என்பது புலிகளின் எதிர்பார்ப்பாகும். இந்த நிலையில், விடுதலைப் புலிகளும் தமது பலத்தின் பெரும் பாகத்தை வன்னிச் சமர்க் களத்தில் குவித்துள்ளதோடு, ஒரு பெரும் தொடர் சண்டைக்கும் தயாராகவே இருந்தனர்.

இதேவேளை, இவ் வன்னிச் சமர்க்களம் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் கடந்த கால மோதல்கள், சமர்களைவிட வித்தியாசமான பண்பையும், பரிமாணத்தையும் கொண்டதாகவே இருந்தது. ஒருபுறம் இவ் வன்னிச் சமர்க்கள மோதல்கள் இரு மரபுவழி இராணுவங்களுக்கு இடையிலான மோதல்கள் போன்ற பரிமாணத்தைப் பெற்றுக் கொண்டிருந்தது. ஆகையினால், இதுவரையில் இடம் பெற்ற மோதல்களில் இருந்து வேறுபாடானதாக இருந்தது.

அடுத்ததாக இம் மோதல்கள் மிகவும் செறிவானவையாகவும், உக்கிரமானவையாகவும் இருந்தன. இதன் விளைவானது ஒவ்வொரு மோதல்களிலும் நூற்றுக்கணக்கில் படையினர் பலியாகவேண்டியிருந்தன. அத்தோடு பல நூறு பேர் காயங்களுக்கும் உள்ளாகவேண்டியும் இருந்தது. இது தவிர ஆயுத தளவாட அழிவுகளும், இழப்புக்களும் பெருமளவினதாக இருந்தது.

இவை ஒருபுறம் இருக்க இரு தரப்பினருமே வன்னிச் சமர்க்களத்தில் தம்மால் ஆக்கிரமிக்கப்பட்ட, மீட்கப்பட்ட பிரதேசங்களை முழுமையாகத் தக்கவைத்துக் கொள்வதில் பெரும் அக்கறை கொண்டிருந்தனர். இதனால், அதற்கென பெரும் விலைகொடுக்கவும் தயாராக இருந்தனர். இது கடந்த காலத்தில் இராணுவத் தரப்பினால் கைக்கொள்ளப்பட்ட வழிமுறை ஒன்றாக இருப்பினும் கூட, வன்னிச் சமர்க் களத்தில் அதற்காக இராணுவம் மேற்கொள்ளும் முயற்சியானது மிகப் பெரியதாகும். இதேசமயம், விடுதலைப் புலிகள் இராணுவ ஆக்கிரமிப்பில் இருந்து மீட்கப்பட்ட பகுதிகளை தக்கவைத்துக் கொள்ள முன்னர் எப்பொழுதும் எடுத்துக் கொள்ளாத அளவில் அக்கறை காட்டுகின்றனர். அதற்கென விலை கொடுக்கவும் அவர்கள் தயாராக உள்ளதாகவே தெரிகின்றது.

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் இதுவரை ஒரு பிரதேசத்திற்காக இருதரப்பில் இருந்தும் அதிக விலை கொடுக்கப்பட்ட பிரதேசமாக வன்னிப் பெரும் நிலப்பரப்பே உள்ளது. இதுவரையில் குறைந்தது 9000 இற்கு மேற்பட்ட இராணுவத்தினரை இச் சமர்க்களத்தில் சிறீலங்கா இராணுவம் இழந்துள்ளது. 20000 இற்கு மேற்பட்டோர் படுகாயங்களுக்கு உள்ளாகியுள்ளனர். கனரகப் போர்த் தளவாடங்கள் என்ற ரீதியில் மூன்று டசின் அளவிலான டாங்கிகள், பல ஆட்டிலெறி பீரங்கிகள் பல உலங்கு வானூர்திகள் எனக் கனரகப் போர்த்தளவாடங்களை அது இழந்துள்ளது. இதேசமயம் பெரும் தொகை ஆயுதத் தளவாடங்களைப் புலிகளிடம் பறிகொடுத்தும் உள்ளது.

மறுபுறம், விடுதலைப் புலிகள் தரப்பிலும் சுமார் 3250 போராளிகள் வன்னிச்சமர்க்களத்தில் வீரச்சாவடைந்துள்ளனர். ஐயாயிரம் வரையிலான போராளிகள் காயங்களுக்கும் உள்ளாகியுள்ளனர்.

யாழ். குடாநாட்டில் ரிவிரச இராணுவ நடவடிக்கை முடிவடைந்தவேளை விடுதலைப் புலிகளின் எதிர்காலம் குறித்து இராணுவ ஆய்வாளர்கள் பலமான கேள்வி எழுப்பினர். குடாநாட்டில் இருந்து புலிகளின் தந்திரோபாய ரீதியிலான பின்வாங்கலை புலிகளின் இயலாமை - பலவீனம் எனவும் மதிப்பிடப்பட்டது. ஆனால், முல்லைத்தீவு படைத்தளத்தின் மீது பாரிய தாக்குதல் ஒன்றை 1996 யூலையில் விடுதலைப் புலிகள் நடத்தி அதனைக் கைப்பற்றிய போது மதிப்பீடு மாற்றம் கண்டது. விடுதலைப் புலிகளின் வீழ்ச்சி உறுதி செய்யப்படவில்லை. யுத்தம் ஒரு புதிய கட்டத்தை அடைந்து விட்டது என்பது தெளிவாகவே வெளிக்காட்டப்பட்டது.

முல்லைத்தீவு படைத்தளத்தின் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட ஓயாத அலைகள் ஒன்றுடன் ஆரம்பித்த வன்னிப் போர்க்கள மோதல்கள் - அதைத் தொடர்ந்து வந்த இரண்டரை ஆண்டுகளிலும் சூடு தணியாததாகவே இருந்தது. இதில் விடுதலைப் புலிகள் 1996 இல் நடத்திய ஓயாத அலைகள் ஒன்று, 1997 இன் ஆரம்பத்தில் நடத்திய ஆனையிறவு, பரந்தன் படைத்தளத்தின் மீதான ஊடறுப்புத் தாக்குதல், ஜெயசிக்குறுய் படை நடவடிக்கை மீதான பதிலடி மற்றும் ஊடறுப்புத் தாக்குதல்கள், கிளிநொச்சிப் படைத்தளத்தின் மீது 1998 பெப்ரவரியில் நடத்திய தாக்குதல், 1998 செப்டம்பரில் நடத்திய ஓயாத அலைகள் இரண்டு என்பன அடங்குகின்றன.



இதேவேளை இராணுவத்தரப்பில் இருந்து சத்ஜெய I , II , III , எடிபல , ஜெயசிக்குறுய், ரிவிபல எனப் பெரும் படை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதில் மூன்று கட்டங்களுடன் கூடிய சத்ஜெய, இறுதிப் படை எடுப்பு என தெரிவிக்கப்பட்ட ஜெயசிக்குறுய் நடவடிக்கைகள் இரண்டும் பெரும் மோதல்களையும், இழப்புக்களையும் இராணுவம் சந்தித்த நடவடிக்கைகளாக இருந்தன. அதாவது இம் மோதல்களில் இராணுவம் கொடுத்த விலையானது மிக அதிகம் என்பதாக மதிப்பிடப்படுகின்றது.

விடுதலைப் புலிகள் இயக்கம் இக்கால கட்டத்தில் இரண்டு பாரிய படைத்தளங்கள் மீது தாக்குதல்களை நடத்தியுள்ளனர். இவை இரண்டும் புலிகளுக்குப் பெரு வெற்றியாக, அமைந்தவையாகும். இதேசமயம் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தாக்குதலுக்கு அஞ்சி பூநகரிப் படைத்தளமானது இராணுவத்தால் விலக்கிக் கொள்ளப்பட்டது. இது படைத்தளங்கள் மீதான புலிகளின் வலிந்து தாக்குதலுக்கு இராணுவம் முகம் கொடுப்பதற்கு தயக்கம் கொண்டிருந்தது என்பதை வெளிக்காட்டும் குறியீடாக அமைந்தது என்று கூடக் கூறலாம்.

இதேசமயம், சிறீலங்கா இராணுவம் மேற்கொண்ட சத்ஜெய, ஜெயசிக்குறுய் ஆகிய இரு பாரிய படைநகர்வுகளின்போது சிறீலங்கா இராணுவம் தனது எதிர்பார்த்த இலக்கை அடைய முடியாததாகவோ அன்றி பெரும் இழப்புக்களின் பின்னர் தாமதமாக அடையவேண்டிய தாகவோ இருந்தது. அதாவது சத்ஜெய நடவடிக்கையை எதிர்பார்த்த வேளையில் இராணுவத்தால் முடிக்க முடியவில்லை. தொடங்கப்பட்ட தாக்குதல் இடைநடுவில் நிறுத்தப்பட்டு பின்னர் இந் நடவடிக்கையைப் பூர்த்தி செய்ய மேலும் இரண்டு கட்டங்கள் அதற்குத் தேவையாக இருந்தது. அதுவும், விடுதலைப் புலிகள் பாரிய இழப்பை ஏற்படுத்திவிட்டு - கிளிநொச்சி நகரை விட்டு விலக்கியபோதே அந் நகரைக் கைப்பற்ற முடிந்தது.

ஆயினும், சுமார் இரண்டு வருடங்களின் பின்னர் விடுதலைப் புலிகள் இயக்கம் ஓயாத அலைகள் இரண்டின் மூலம் கிளிநொச்சி நகரை மீட்டெடுத்துள்ளமை, சத்ஜெய நடவடிக்கைகள் மூலம் பெற்ற அனுகூலங்களைக்கூட இராணுவத்திற்கு முற்றாக இல்லாது ஒழித்தது. இந்தவகையில் சத்ஜெய நடவடிக்கை பெரும் இழப்பிற்கான ஒன்றாக மட்டுமே எஞ்சியது.

இதேவேளை, சிறீலங்கா இராணுவ வரலாற்றில் மிகப்பெரும் நடவடிக்கையாக அமைந்த ஜெயசிக்குறுய் நடவடிக்கையானது, 18 மாதங்கள் இடம்பெற்றதன் பின் தமது இலக்கை அடைய முடியாத நிலையில் இடைநிறுத்தப்பட்டது. பல நோக்கங்களுடன் கூடியதான இந் நடவடிக்கையானது - வன்னிப் பெருநிலப்பரப்பையும் குறிப்பாக விடுதலைப் புலிகளின் கேந்திர நிலைகள் பலவற்றையும் கட்டுப்பாட்டில் கொண்டு வருவதற்கான பெரும் நடவடிக்கையாகும்.

ஆனால், பல ஆயிரக் கணக்கான துருப்பினரைப் பலி கொடுத்த பின்னரும் வெற்றி பெற முடியாமல் போன இந் நடவடிக்கை மூலம் வன்னிப் பிரதேசத்தின் ஒருபகுதியை இராணுவம் தனது பிடிக்குள் கொண்டு வந்துள்ளது. ஆயினும், இந் நடவடிக்கையின் போது ஏற்பட்டுள்ள ஆளணி மற்றும் இராணுவத் தளவாடத்தின் இழப்பானது இப் பிரதேசத்திற்காக இராணுவம் அதிகவிலை கொடுத்து விட்டது என்றே இராணுவ ஆய்வாளர்களால் மதிப்பிட வைத்துள்ளது. அத்தோடு இவ் ஆய்வாளர்கள் அண்மைக்கால விடுதலைப் போராட்ட வரலாற்றில் இவ்வாறான இழப்பை எந்தநாட்டு இராணுவமும் கொடுக்கவில்லை என்றே சுட்டிக்காட்டுகின்றனர்.

வன்னிச்சமர்க்களத்தில் - சிறீலங்கா இராணுவம் மேற்கொண்ட பாரிய படைநடவடிக்கைகளில் குறிப்பாகப் புலிகள் எதிர்கொண்ட நடவடிக்கைகளில் இராணுவம் தனது இலக்கை அடையவில்லை என்றே கூறலாம். அதில் புலிகளின் ஓயாத அலைகள் இரண்டு நடவடிக்கையானது வன்னிச்சமர்க்களத்தின் போக்கில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது. இதில் இரண்டு அம்சங்கள் முக்கியமானவையாகும்.

1. கிளிநொச்சி நகரம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டமை.
2. ஜெயசிக்குறுய் நடவடிக்கை நிறுத்தப்பட வேண்டிய நிலையை உருவாக்கியமையும் ஆகும்."

இந்த வகையில், ஓயாத அலைகள் - 01

*(தொடர்ச்சி 13-ம் பக்கம்)*

www.tamilarangam.net




# பழைய விம்பங்களை உடைத்தெழும் தமிழீழத்தின் புதிய பெண்கள்



பல்லாயிரம் வருடங்களாக பெண்கள் பலவீனமானவர்கள் என்ற ஐதீகமே எங்கும் பரப்பப்பட்டு வந்துள்ளது. இதனையே பெண்களும் கூட நம்பி வந்துள் ளனர். ஆணாதிக்க சமுதாயத்தின் எழுச்சிக்கும் இந்த ஐதீகமே அடிப்படையானது. பெண்களின் அவல நிலைக்கும் இந்த ஐதீகமே அடிப்படையானது. ஆண்களின் பாலியில் இச்சையைத் தீர்ப்பதற்கு மட்டுமே பெண்கள் பிறந்தவர்கள் என பகிரங்கமான காமப்பொருட்கள் ஆக்கும் காட்டுமிராண்டித் தனத்திற்கும் இதுவே அடிப்படையானது.

தமிழீழப் பெண்களின் விடுதலை எழுச்சி இன்று பெரும் புரட்சிகரமான சக்தியாக உருவெடுத்துள்ள தமிழீழப் பெண்கள் உலகின் ஆணாதிக்க சமுதாய மனோபாவத்திற்குள்ளும் அடக்குமுறைச் சக்திகளுக்குள்ளும் பலத்த அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளனர். அதே நேரம் பெண்கள் இயல்பிலேயே மென்மையானவர்கள் என்ற அடக்குமுறையாளர்களின் ஐதீகத்தில் இருந்தும் பெண்கள் விடுவித்துள்ளனர்.



மனித வரலாற்றில் ஒரு முக்கியமான சாதனையைத் தமிழீழப் பெண்கள் எட்டியுள்ளனர். சிங்களப் பேரினவாத வெறித்தனத்தோடும் உலகின் வல்லரசுப் படைகளின் ஆயுதங்களோடும் யுத்த தந்திரோபாயப் பயிற்சிகளோடும் வருகின்ற ஆண்களை மட்டுமே கொண்ட ஒரு இராணுவத்திற்கு தாங்கள் தனித்து நின்று முகம் கொடுக்கின்றனர். தங்களது சுயபலம் கொண்டு எதிர்க்கின்றனர். அதிகளவு சுடுதிறனைக் கொண்டதும் ஆட்பலம் அதிகமானதுமான ஒரு இராணுவத்துடன் ஒப்பீட்டளவில் குறைந்தளவு சுடுதிறனுடனும் குறைந்தளவு ஆட்பலத்துடனும் நின்று போராடும் அப் பெண்களின் மனோதிடமும் மனித ஆளுமையும் உன்னதமானவை.

ஆண்மட்டுமே ஆளுமை உள்ளவன் என்ற ஆணாதிக்க மனப்பான்மை மாயை இவர்களால் கிழிக்கப்படுகின்றது.

இனிவரும் காலங்களில் பெண்கள் பலவீனமானவர்கள் இயலாமையானவர்கள் புத்தி சாதுரியம் அற்றவர்கள் என எண்ணியாருக்கும் அஞ்சி வாழவேண்டிய அவசியம் இல்லை. அத்துடன் உடல் ரீதியாக தம்மை ஆட்கொள்வதற்கு ஆண்களை அனுமதிக்க வேண்டிய தேவையும் இல்லை.

தமிழீழப் பெண்களின் புரட்சிகர மாற்றத்தினால் தமிழ்ச்சமூகத்திற்கு பெரியளவில் நன்மைகள் கிட்டியுள்ளன. மேற்குலகம் இதுவரையில் கேள்விப்படாத அனுகூலங்களை இது கொடுத்துள்ளது. பெண்களுக்கான தனி மனித பாதுகாப்பை இந்த விடுதலைப் போராட்டம் உறுதிசெய்வதானது பெண் ஒடுக்குமுறையின் ஆணிவேரையே ஆட்டி அசைக்கும்முயற்சியாகும்.

பெண்களின் பாதுகாப்பிற்கு பெரும் அச்சுறுத்தலான ஆபாசஇலக்கியங்களும் விளம்பரங்களும் கேளிக்கை விழாக்களும் எந்தக் கட்டத்திலும் எமது விடுலை இயக்கத்தால் அனுமதிக்கப்படும் விடயங்களல்ல. தமிழ்ப் பெண்களின் வீரமும் மனித ஆளுமையும் வெளிப்படுத்தப்படும்போது சமூகத்தில் உள்ள ஒவ்வொரு பெண்களுமே மதிக்கப்படுகின்றார்கள். தங்களைத் தாங்களே உடல் ரீதியாகப் பாதுகாத்துக் கொள்ளும் பலம் கொண்ட பெண்கள் ஆயிரக்கணக்கில் சமூகத்தில் காணப்படும்போது பெண்களுக்கு எதிரான வன்முறைகளின் அளவுகளும் சடுதியாக வீழ்ச்சியடையும் என்பது திண்ணம்.

ஆபாச இலக்கியங்கள் எனப்படுபவை வெறும் வியாபாரமே அன்றிவேறில்லை.

இங்கு பெண்க்ளின் கவர்ச்சியான மேனிகளும் அவர்களின் ஆபாசத் தோற்றங்களும் அழகியல் பொருட்கள் என்ற பாவனையில் துஷ்பிரயோகம் செய்யப்பட்டு விற்பனையாகின்றன. இவற்றுக்கு உதாரணமாக நீலப் படங்கள் மற்றும் ஆபாச கேளிக்கைக் கூடங்கள் போன்றவற்றைக் கூறலாம். இந்த ஆபாச இலக்கியங்களே பாலியல் வன்முறைக்குக் காரணங்கள் என்று மேற்குலகப் பெண்ணியல் வாதிகளால் அடையாளம் காணப்பட்ட போதும் இதன் பெருக்கத்தின் தீவிரத்தை இவர்களால் தடுத்து நிறுத்தமுடியவில்லை. இந்த ஆபாச இலக்கியங்களை சட்டவிரோதமாக்குவதற்கு ஆணாதிக்க மற்றும் முதலாளித்துவ நிறுவனங்கள் கடும் எதிர்ப்புகளுடன் சவால் விடுகின்றன அது மட்டுமல்லாமல் இதற்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்யும் பெண்களை கேலிக் குரியவர்களாக்கி பொதுப் படையாக மானபங்கப்படுத்துகின்றனர். இதனால் இன்றைய மேற்குலக பெண்ணிய வாதிகளின் நிலைமை ஒன்றில் அடக்குமுறைக் குள்ளாக்கப்பட்டுள்ளது, அல்லது வலிமை யற்றதாக்கப்பட்டுள்ளது.

தமிழீழ தேசத்தைப் பொறுத்தவரை பெண்களை இழிவாக்கும் ஆபாச இலக்கியங்கள் சட்டவிரோதமாக்கப்பட்டுள்ளது. பெண்களின் பாதுகாப்பை அவர்களே உறுதிசெய்யும் ஆற்றலின் வளர்ச்சியானது மனித ஜீவன்கள் என்ற ரீதியில் பெண்களுக்கு இயல்பான மரியாதையை வழங்குவதற்கான தொடக்கத்திற்கு உதவியுள்ளது.

## மேற்குலகப் பெண்ணியத்தின் சுதந்திரங்கள்.

மேலைத்தேய சமூகங்களில் பெண்ணிய அமைப்புக்களினதும் பெண் ஆய்வாளர்களினதும் பெருக்கம் அதிகமாக இருந்த போதும் பெண் விடுதலையானது இற்றைக்கு 50 வருடங்களுக்கு முன்பிருந்த நிலையைவிட பின் நோக்கிச் சென்றுள்ளது. இங்கு பெண்ணியம் என்பது சுயம் சார்ந்த பாதை வழியே சென்றுள்ளதுடன் தனிப்பட்ட தன்மையை உடையதாகவே விளங்குகின்றது. அதாவது இங்கு பெண்விடுதலை என்பது தாங்கள் விரும்பும் எப்பொருளையும் அவை உடனடியான சந்தோசத்தைத் தரும் பட்சத்தில் அதே நேரம் எவ்வளவு தூரம் பிரயோசனம் அற்றன என்றாலும் அவற்றைக் கொள்வனவு செய்வதற்கான சுதந்திரம் என்றும், தங்கள் உடல்களைப் போதைப் பொருள் பாவனைக்கும் புகையிலை மற்றும் மதுபானப் பாவனைக்கும் உள்ளாக்கி வருத்திக் கொள்வதற்கான சுதந்திரம் எனவும் தன்னிச்சையான பாலியல் உறவுகளை ஏற்படுத்திக் கொள்ளும் சுதந்திரம் என்றும் பிரபலப்படுத்திக் கொள்கின்றனர். இந்தச் சுதந்திரங்கள் தனித்துவிடப்பட்டதும் அன்னியதுமான வாழ்க்கையை வாழ்வதற்கே வழிகோலுகின்றன. அங்கு வாழும் பெண்களில் காணப்படும் இம்மாற்றமானது ஆழமானதாக இருக்கின்றது. ஆனால் விடுதலை பெற்றுத்தரக் கூடிய ஒன்றாகக் காணப்படவில்லை. ஏனெனில் ஒரு காலத்தில் ஆணாதிக்க மேலாண்மைக்கு உட்பட்டு இருந்த பெண்கள் தற்போது முதலாளித்துவத்தின் இலாபத்திற்கான மூலதனமாகியுள்ளனர்.

பெண்களுக்கெதிரான வன்முறைக் குற்றங்கள் அதிகரிக்கின்றனவே ஒழிய குறையவில்லை. அதுமட்டுமல்லாமல் ஒரு பெண் நன்னடத்தை கொண்டவள் என்றாலும் அதற்கான மதிப்பை தன் குடும்பத்திடமோ சமூகத்திடமோ பெற்றுக் கொள்ள முடிவதில்லை.

பெண்ணியம் அல்லது பெண்விடுதலை என்ற செற்களின் நிறைவான கருத்தை மேற்குலகப் பெண்ணியம் கொண்டிருக்கவில்லை என்ற உண்மையை ஒளிவு மறைவின்றி கூற முடியும். பெண்களின் விடுதலைக்கு ஒரு பலமான அத்திவாரத்தை கட்டியெழுப்புவதில் மேற்குலகப் பெண்ணியவாதிகள் தோற்றமைக்கான காரணம் அங்கு பெண்களையும் இணைத்துச் செல்லும் ஆயுதம் தாங்கிப் போராடும் ஒரு அமைப்பு இல்லாதமையே ஆகும். என்று வெளிப்படையாகக் கூற முடியும். ஏனெனில் போராடும் மக்கள் கூட்டத்தினால் மட்டுமே ஆரோக்கியமான மாற்றங்களை இலகுவில் உள்வாங்கிக் கொள்ள முடியும். பெண்களின் ஆளுமையை நிரூபித்துக் காட்டவும் பெண்களின் சமூக நலனில் அக்கறை காட்டவும் முடியும்.

## யார் பெண்ணியவாதிகள்?

இது இப்படியிருக்க மேலைத்தேய பெண்ணிய வாதிகளின் சகாக்களாவே கொழும்பு பெண்ணிய வாதிகள் காணப்படுகின்றனர். பெண்ணியவாதிகள் என்று அழைக்கப்படும் இவர்கள் ஆணாதிக்கம் நிறைந்த குடியேற்ற வாதக் கல்வியையே பெற்றுக் கொண்டுள்ளார்கள். [அதிகாரத்தின் மூலமும் விளம்பரப் படுத்தலின் மூலமும்] அதேநேரம் அங்குள்ள பெண்களின் நிலை பற்றி பொருத்தப்பட்டான

**கொற்றவை**

தகுந்த சிந்தனை எதனையும் கொண்டவர்களாக அல்லாமல் தோல்வியைத் தழுவும் மேலைத் தேயப்பெண்ணியத்தை பிரதிபண்ணுபவர்களாக உள்ளனர்.

சேர்ந்தியங்கும் தத்துவத்தின் ஒரு பகுதியாக வல்லாதிக்கத்தின் ஒரு பகுதியாக தங்களைத் தாங்களே மாற்றிக் கொண்டுள்ளார்கள். தமிழீழப் பெண்களுக்கு எதிராகச் சிறீலங்கா இராணுவம் இழைக்கும் கொடுமைகள் பற்றியும் அநீதிகள் பற்றியும் பாராமுகமாக இருக்கும் இவர்கள் அந்த அநீதிக்கு எதிராகத் துணிவுடன் போர்புரியும் பெண்போராளிகளைச் சிறுமைப்படுத்தி விமர்சனம் செய்கிறார்கள். ராதிகா குமாரசுவாமி போன்றவர்கள் ஆணாதிக்கத்தின் கூட்டாளிகள் என்பதற்கு இதுவே ஒரு உன்னத எடுத்துக்காட்டு. ஏனெனில் பெண்களுக்கெதிரான வன்முறைகள் பற்றி அறிக்கை சமர்ப்பிப்பதற்காக வேண்டி ஐக்கிய நாடுகள் சபையினால் நியமிக்கப்பட்ட விஷேட நிருபரே இவர். உலகின் மிகவும் கொடுமையான வன்முறைகள் மேற்கொள்ளப்படும் நாட்டிலிருந்து வந்த இவர் பெண்களுக்கெதிராக மோசமான வடிவங்களில் வன்முறைகளைக் கட்டவிழ்த்துவிடும் அதே அரசின் ஆதரவைப் பெறுகின்றார். வெற்றிகரமான விதத்தில் உண்மைகளை

[தொடர்ச்சி 13—ம் பக்கம்]

www.tamilarangam.net



# எதையும் தாங்கும் நிலையில் புலிகள் எப்படியும் வதைக்கும் நிலையில் சந்திரிகா




தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தினை முன்னெடுக்கும் தமிழீழ மக்களின் தேசிய விடுதலை இயக்கம். தமது இன்னுயிர்களையே தமிழீழ மக்களினதும் தமிழீழத் தேசத்தினதும் தேசிய பாதுகாப்புக்காக அர்ப்பணித்து ஆயுதப் போராட்டத்தால் தமிழீழ மண்ணையும் மக்களையும் அடிமை கொள்ள முயலும் சிறீலங்காவின் இராணுவ ஆக்கிரமிப்புக்களைத் தடுத்து நிற்கும் தமிழீழ மக்கள் சக்திதான் தமிழீழ விடுதலைப் புலிகள். இந்த மக்கள் சக்தியின் மகத்தான தியாகங்களால் அளப்பரிய வீரதீர சாதனைகளால் பேராற்றலும் இலட்சியத்தூய்மையும் கொண்ட தலைமையால் தமிழீத் தேசத்தை மீளஅமைத்தல் என்ற தமிழீழ மக்களின் குடியொப்ப ஆணை வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இதன் விளைவாக காலனித்துவத்தால் உலகின் கண்களிலிருந்து மறைக்கப்பட்ட தமிழீழத் தேசம் இன்று உலகிற்கு மீளவும் தெளிவாகத் தெரிகிறது.

இந்த யதார்த்தத்தினை ஏற்க மறுத்து ஆக்கிரமித்து 60000–க்கு மேற்பட்ட தமிழீழ மக்களினை இனஅழிப்பு செய்து நிற்கும் சிங்களப் பெரும்பான்மை அரசாங்கம் தனக்கு பிரித்தானிய காலனித்துவம் வழங்கிய இலங்கைத் தீவின் அரசாங்கம் என்ற சட்டஅந்தஸ்துப் போர்வையைத் தன் மேல் போர்த்திக் கொண்டு தனது தமிழின அழிப்பு நடவடிக்கைகளை நியாயப்படுத்தி வருகிறது. ஆனால் 1972ஆம் ஆண்டுடன் இந்த காலனித்துவம் வழங்கிய இலங்கையின் சட்டபூர்வ அரசாங்கம் என்ற போர்வையையும் சிங்கள அரசாங்கம் அரசியல் அமைப்பு வன்முறை மூலம் கிழித்தெறிந்து இலங்கைத் தமிழ் மக்களை நாடற்ற தேசிய இனமாக மாற்றியது. இந்தச் செயல்தான் இலங்கைத் தமிழ் மக்கள் தம்மை மீளவும் தமிழீழ மக்களாகத் தமது சுயநிர்ணய உரிமையினைக் கொண்டு பிரகடனப்படுத்திட வைத்தது. இந்த சுயநிர்ணய உரிமைப்பிரகடனத்தின் அடிப்படையில் தமது பாரம்பரிய பிரதேசமும் காலனித்துவத்திற்கு முன் தனியரசாக விளங்கியதுமான தமிழீழத் தேசத்தில் தமது தேசிய விடுதலை இயக்கமான தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசாங்கத்தில் தமிழீழ மக்கள் தமது தேசிய பாதுகாப்புடன் வாழத்தொடங்கி விட்டனர்.

இந்த சர்வதேச சட்டங்களுக்கு இயைபான சுயநிர்ணய உரிமைப் பிரயோகத்தை ஏற்க மறுத்து இனஅழிப்பு - உட்கட்டுமான அழிப்பு என்ற இரு செயற்பாடுகள் மூலம் தமிழீழத் தேசத்தை ஆக்கிரமித்து தமிழீழ மக்களின் அரசியல் பணிவை சிறீலங்கா என்னும் அந்நிய அரசுக்கு வலுக்கட்டாயமாகப் படைபலத்தின் மூலம் பெற்று தமது இறைமையை தமிழீழத் தேசத்தின் மேல் திணிக்கும் சர்வதேசக் குற்றச்செயலில் சிறீலங்கா இன்று வரை தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது. இந்த சிறிலங்காவின் தமிழீழ மக்கள் மீதான முற்றுகைகள்- யுத்தங்கள்- மனிதாயத்திற்கு எதிரான குற்றச்செயல்கள் ஆகியனவற்றில் இருந்து தமிழீழ மக்களைப் பாதுகாக்கும் பெரும் கடமையில் தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்.

இதனால் தமிழீழ மக்களின் அரசியல் பணிவை ஆயுத அச்சுறுத்தல்களாலும் பெற முடியாது என்பதை தெளிவாக கண்டுகொண்ட சிறிலங்கா தமிழீழ மக்களுக்கு உணவையும் மருந்தையும் வழங்கலை தடுத்து நிறுத்தி உணவை ஆயுதமாகப் பயன்படுத்தும் சர்வதேச குற்றச் செயல்களில் ஈடுபட்டு வருகின்றது. இந்தக் கொடிய சர்வதேச குற்றச் செயலினால் வன்னியில் பட்டினிச் சாவு நிலை வேகப்பட்டு வருகிறது. இதனை மாற்றியமைக்க சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் உணவு வழங்கல்களுக்கான போக்குவரத்தினை செம்மைப் படுத்தும் நோக்கில் சிறீலங்காவிடமும் தமிழீழ விடுதலைப் புலிகளிடமும் பாதையினைத் திறந்து உணவு லொறிகளை அனுமதிக்குமாறு வேண்டுகோள் விடுத்தது. மக்களின் மக்களுக்கான மக்கள் தேசிய விடுதலை இயக்கமான தமிழீழ விடுதலைப் புலிகள் உடனடியாக இம் முயற்சிக்கு தமது அனுமதியை வழங்கினர். ஆனால் சிறிலங்கா சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் முயற்சியையும் தனது இராணுவத்தின் நலன் பெருக்கும் நடவடிக்கையாக மாற்ற முற்பட்டு தனது படைகளால் கைப்பற்றுவதற்கு முடியாமல் இருக்கும் A9 பாதையை திறக்க முயற்சித்து வந்தது. இதனைத் தெளிவாகச் சுட்டிக்காட்டி பாதைத் திறப்பை சிறீலங்காவின் இராணுவ நலப் போக்குக்கு தம்மால் இணங்க முடியாது என்பதை விடுதலைப் புலிகள் தெளிவு படுத்தியிருந்தனர்

ஆயினும் தமிழ் மக்களின் அதிகரித்து வரும் இன்னல்களை கவனத்தில் கொண்டு மக்களுக்காக இந்தப் பாதைத் திறப்பை தமிழீழ விடுதலைப் புலிகள் அனுமதித்துள்ள செய்தி வெளிவந்துள்ளது. இராணுவ ரீதியாக சிறீலங்கா தொல்லைகளை ஏற்படுத்தலாம் என்ற நிலையிலும் மக்களுக்காக அத் தொல்லைகளுக்கு முகங்கொடுக்கத் தயாராகி விடுதலைப் புலிகள் கொடுத்த இந்த பாதைதிறப்பு அனுமதி, தமிழீழ விடுதலைப் புலிகள் தம் உயிரிலும் மேலாகத் தமிழீழ மக்களை நேசிக்கும் மகத்தான மனிதநேயத்தின் வெளிப்பாடாக அமைகிறது. இதனை வெரித்தாஸ் வானொலி நேரடியாகவே மக்கள் நலனுக்காக விடுதலைப் புலிகள் தம் மேல் அதிரடித் தாக்குதல்கள் ஏற்படலாம் என்பதையும் பொருட்படுத்தாது எடுத்த மக்கள் நலன் பேணும் நடவடிக்கை எனக்குறிப்பிட்டமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை ஆபத்தைத் தெரிந்த நிலையிலும் விடுதலைப் புலிகள் கொடுத்துள்ள அனுமதி விடுதலைப் புலிகளின் இராணுவ பலத்தின் வலிமைக்கு மற்றொரு உதாரணமாகவும் விமர்சகர்களால் குறிப்பிடப்படுகிறது. எந்த விதமான சிறீலங்காவின் தாக்குதல்களையும் முறியடிக்க வலிமையுள்ள




மரபு வழி கெரில்லா போர்த்திறன்களை நிறைய்க் கொண்ட நம்பிக்கை மிக்க உறுதியான இராணுவமாக தமிழீழ விடுதலைப் புலிகள் வளர்ந்து விட்ட நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகளால் எந்த வகையான சிறீலங்காவின் தாக்குதல்களையும் தடுத்து நிறத்தவும், ஆக்கிரமிப்புக்களை நீண்ட காலத்திற்கு நிலைக்க விடாது தடுக்கவும் முடியும் என்பதையே பாதை திறப்புக்கு அவர்கள் அளித்துள்ள அனுமதி தெளிவாக்கியுள்ளது. யாழ் குடாநாட்டில் ஆழம் தெரியாமல் காலை விட்ட சந்திரிகா இன்று அங்கு தன் படைகள் பலியாவதை பார்த்து கையைப்பிசைந்து கொண்டு இருக்கின்றார். அவரின் பாதுகாப்பு பலம் மிகுந்த ஆனையிறவு முகாமிலுள்ள 54 ஆவது படைப்பிரிவின் தளபதி மேஜர் ஜெனரல் சரத் முனசிங்கா எந்த நேரத்திலும் ஆனையிறவு விடுதலைப் புலிகளிடம் வீழ்ச்சி அடையும் எனத் தெரியாத அளவுக்கு ஆனையிறவுத் தளம் மீது விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் வேகப்பட்டு வருவதை பகிரங்கமாக பத்திரிகையாளர் இக்பால் அத்தாஸ்ஸிடம் தெரிவித்துள்ளார். 1991இல் ஒரு பட்டாலியன் அணியையே அங்கு நிலை கொள்ள வைத்திருந்த சிறிலங்கா இன்று 7 பிரிகேட்டுக்களை அந்த திறந்த வெளிக்காம்பில் இறக்கியிருப்பது சிறிலங்கா எவ்வளவு தூரத்திற்கு விடுதலைப் புலிகளுக்கு அஞ்சுகிறது என்பதற்கு சிறந்த உதாரணம். ஆனாலும் விடுதலைப் புலிகள் தை மாதத்தில் 41 தடவைகளும் மாசியில் 42 தடவைகளும் பங்குனியில் 161 தடவைக்ளும் வைகாசியில் 64 தடவைகளும் இராணுவத்தளத்தை தாக்கியிருப்பதாக தகவல் வெளியிட்டுள்ள சிறிலங்கா கேணல் ரோகான் சித்திரை முதல் இராணுவத்தினர் முன்னேற முற்படும் நேரமெல்லாம் விடுதலைப் புலிகள் பீரங்கிகளால் தாக்குவதாக தெரிவித்துள்ளார். 5 மாதங்களில் 521 தடவைகள் புலிகள் பீரங்கிகளால் தாக்கியுள்ளதாகவும் வேவுப் புலிகளின் தலைசிறந்த அணியான சம்பியன்கள் ஆனையிறவுத் தளத்தில் தாராளமாக நடமாடிவருவதாகவும் கலங்கும் சிறீலங்கா இராணுவத்தினர் தாம் தோல்விக்கு நாள் பார்த்து காத்திருப்பதை தம்மையறியாமலே பகிரங்கப் படுத்தி விட்டனர். ஆனையிறவு வீழ்ந்தால் யாழ்ப்பாணம் வீழ்ந்து விடும் என ஆருடம் கூறியுள்ள மேஜர் ஜெனரல் சரத் முனசிங்க தாக்குதல்கள் பளைப்பக்கமாக வருகின்றது எனவும் இராணுவ முன்னரங்க நிலைகளில் இருந்து 300 மீற்றர் தொலைவில் விடுதலைப் புலிகளின் காவல் அரண்களும் வேலிகளும் அமைந்துள்ளன எனக் கூறி குடாநாட்டில் விடுதலைப் புலிகளின் ஸ்திரத்தன்மையை பகிரங்கமாக ஏற்றுக் கொண்டுள்ளார்.

இந்தப் பகைப்புலத்தில் பார்க்கையில் விடுதலைப் புலிகள் உணவு விநியோகத்திற்கு பாதை திறக்க அனுமதி வழங்கியமை விடுதலைப் புலிகளுக்கு ஏற்படக் கூடிய எந்த நிலைமைகளையும் சமாளிக்கக் கூடிய வலிமை உண்டு என்ற யதார்த்தத்தை தெளிவாக்கியுள்ளது. அத்துடன் தமிழீழ மண்ணின் உண்மையான இறைமையாளர்கள்



தொடர்ச்சி 7ம் பக்கம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





தமிழீழ விடுதலைப் புலிகளே என்பதை சிறீலங்கா இராணுவமும் ஏற்றுள்ள நிலைமையையும் உலகிற்கு தெளிவாக்கிவிட்டது.

இந்நிலையில் தன் இராணுவத்தோல்விகளை கண்டு துவளும் சந்திரிகா வழமைபோல் கதிர்காமரை விடுதலைப் புலிகளுக்கு வழங்கல்கள் வரும் பாதைகளை அடைக்க சர்வதேச பரப்புரைப் படையெடுப்பை நடாத்தும்படி தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கு இராணுவ யாத்திரை அனுப்பியுள்ளார். அத்துடன் கடல் ஆதிக்கமே தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எழுச்சியைக் கொடுக்கிறது எனக் கணக்குப் போடும் சந்திரிகா அரசாங்கம் தனது கடற்படையின் எல்லாவகை கப்பல்களினதும் படகுகளினதும் எண்ணிக்கையை ஒன்றரை மடங்காக (148) அதிகரித்துள்ளது. இவ்வாறாக படைபலத்தை அதிகரிப்பதன் மூலமும் தமிழ் மக்களை வதைப்பதன் மூலமும் தமிழீழ மண்ணில் ஆக்கிரமிப்பை நிலைப்படுத்த சந்திரிகா முயல்கிறார்.

சந்திரிகாவின் சிறீலங்கா இராணுவம் மன்னார் பள்ளி முனையில் பெற்றோருடன் வாழ்ந்து வந்த 21 வயது ஜடா கமலிட்டா என்ற தமிழ் இளம் பெண்ணை பாலியல் வன்முறைப்படுத்தி அவரின் பெண்ணுறுப்பில் 18 காயங்களை ஏற்படுத்தி அடிவயிற்றில் கத்தியால் குத்தி மீளவும் அவரின் பெண்ணுறுப்பில் துப்பாக்கியால் சுட்டுக்கொன்ற மனிதக் கொடுமையும்- சிறீலங்காவின் கலேவில் பகுதியில் 6 குழந்தைகளுக்கு தாயான தமிழ் அன்னை ஒருவர் மீது சிறீலங்காப் படைகள் பாலியல் வன்முறைப் பிரயோகத்தில் ஈடுபட முனைந்த பொழுது அவர் தப்பி தன் கைக் குழந்தையையும் தூக்கிக் கொண்டு இத் தமிழ்த்தாய் தப்பியோடுகையில் பொறிவெடியில் சிக்கி படுகாயப்பட அவரை அந்த நிலையில் தூக்கி வந்து அவரின் பிள்ளைகளுக்கு முன்பாக போட்டு பாலியல் வன்முறை புரிந்த கொடுமையும் ஒரு பெண்ணின் ஆட்சியில் தமிழ்ப் பெண்கள் எவ்வளவு தூரத்திற்கு இனக்காரணத்தால் வதைக்கப்படுகிறார்கள் என்பதை தெளிவாக்கியுள்ளது. அத்துடன் சர்வதேச பார்வைகளுக்கு சந்திரிகா அரசாங்கம் எள்ளளவும் மதிப்பளிப்பதில்லை. எல்லா சர்வதேச சட்டங்களுக்கு எதிரான நடவடிக்கைகளிலும் சிறீலங்கா தாராளமாக ஈடுபட்டு தமிழ் மக்களை அடிமைப்படுத்த முற்படுவதற்கு இவை மீண்டும் உதாரணங்களாகியுள்ளன.

சந்திரிகா வளர்க்கும் இனவெறி சிங்கள பெண்களிடை தமிழ் மக்களை எப்படியும் நடாத்தலாம் என்னும் அளவுக்கு இனமேலாண்மைத் தன்மையாக மாறிவிட்டதோ என ஐயுறும் அளவுக்கு வவுனியாவில் உள்ள சிறீலங்கா விமானப்படை அதிகாரியின் மனைவியான சஜீவனி வத்தேகம நடந்துள்ளார். இவர் வீட்டில் பணிப் பெண்ணாக இருந்த தமிழ்ச்சிறுமி ஒருத்தியின் தலையில் துடுப்பெடுத்தாடும் மட்டையினால் அடித்து அச் சிறுமியின் மண்டையைப் பிளந்து அவரைக் கொன்றுள்ளார். சிறீலங்காப் படைகளுக்கு தமிழ் மக்களை கொன்றழிப்பதில் கொடுக்கப்படும் உற்சாகங்கள் இப்பொழுது படையினரின் குடும்பத்தினருக்கும் அவ்விதம் தாமும் செயற்படலாம் என்ற தென்பை அளித்து வருகிறதோ என இச்சம்பவம் ஐயுறவைக்கிறது. எது எப்படியிருப்பினும் சந்திரிகா அரசாங்கம் தமிழர்களுக்கு பாதுகாப்பு வழங்குவதில் அக்கறையற்ற அரசாங்கம் என்பதையே சிறீலங்காவில் நடந்து வரும் நாளாந்த நிகழ்வுகள் படம் பிடித்துக்காட்டுகின்றன.

இந்நிலையில் தமிழ் மக்களுக்காக தம்மையே அர்ப்பணித்து எதையும் அவர்களுக்காகத் தாங்கத் தயாராக உள்ள விடுதலைப் புலிகளா அல்லது தன் ஆக்கிரமிப்பை நிலைப்படுத்துவதற்காக எப்படியும் தமிழ் மக்களை வதைக்க ஆயத்தமாக உள்ள சிங்கள அரசாங்கத்தினரா தமிழ் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவர் என்பதை உலகிடம் கேட்க வேண்டிய பொறுப்புள்ளவர்களாகப் புலம்பெயர் தமிழர்களாகிய நாம் உள்ளோம்.

அவ்வாறே, ஆனையிறவுத் தளபதியினாலேயே தோல்வி நெருங்குவது ஆருடம் கூறபட்டுள்ள சிறீலங்கா ஆக்கிரமிப்பு படைகளை முழுப்பலத்துடன் விரட்டியடித்து எமது மக்களை சிங்கள அந்நிய அரசாங்கம் எப்படியும் வதைக்கலாம் என்ற நிலையில் இருந்து அவர்கள் விடுதலை பெற தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு நிதிப்பலம் வழங்கும் ஊற்றுக்களாக ஒவ்வொரு புலம்பெயர் தமிழரின் கரங்களும் மாற வேண்டிய காலத்தில் நாம் வாழ்கின்றோம். கடல் வலிமை கண்டு சந்திரிகா அரசாங்கம் அதனை முறியடிக்க 100 இலிருந்து 148 கப்பலாக தன் கடற்படைப் பலத்தைப் பெருக்கியுள்ளதென்றால் நாம் வான் வழி நின்று சிறீலங்காவின் அனைத்து ஆக்கிரமிப்புக்களையும் தகர்த்தெறிய புதிய பலத்தை விடுதலைப் புலிகளுக்கு வேகமாக வளர்ப்போம். இது எம் கடமை. தமிழீழ மண்ணை மீளவும் மீட்டெடுத்தல் என்ற வெற்றிப் போராட்டத்தின் உந்து சக்திகளாக நாம் மாறுவோம். விடுதலை பெற்ற தமிழீழ மண்ணில் 2000ஆம் ஆண்டை தமிழீழ மக்கள் கொண்டாடும் காலத்தை உருவாக்குவோம்.



# சந்திரிகா அரசே போக்குவரத்துப்பாதையைத் திற! பட்டினிச்சாவில் இருந்து மக்களைக் பாதுகார்!!

## பரந்துபட்ட மக்கள் போராட்டம்

சந்திரிகா அரசினாலும் அதன் இராணுவத்தினாலும் வன்னிக்கான போக்குவரத்து அதன் இராணுவ நடவடிக்கை காரணமாக யூன் 26ஆம் திகதி முற்றாக மூடப்பட்டது.

இந்தப் போக்குவரத்துத் தடையால் வன்னியில் ஏற்பட்ட பட்டினிச்சாவு அபாயமும், மருத்துவ வசதியின்மையால் ஏற்பட்ட அநியாய மரணங்களும், மாணவர்களின் கல்விக்கு ஏற்பட்ட பாதிப்பும், குழந்தைகளின் போசாக்கு, ஆரோக்கியத்திற்கு ஏற்பட்ட நெருக்கடிநிலை என்பனவும், மக்கள் மத்தியில் கொதிப்புணர்வை ஏற்படுத்தியது, போராட்டத் தீயை வளர்த்தது. போக்குவரத்துத்தடையால் வன்னியில் சிக்குண்ட மக்களும் தமது போக்குவரத்துக்கு வழிசெய்யுமாறு கோரி போராட்டத்தில் குதித்தனர்.

### யூலை 12. வவுனியா.

போக்குவரத்துத்தடையால் வன்னியில் சிக்குண்ட இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட மக்களில், சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள், வவுனியா செயலகத்தை முற்றுகையிட்டனர். காலையில் இருந்து மாலைவரை போராட்டம் நடத்தினர். தமது சொந்த இடங்களுக்கு தாம் திரும்பிச்செல்ல வன்னிப்போக்குவரத்தை ஏற்படுத்துமாறு சந்திரிகா அரசை அவர்கள் வலியுறுத்தினர்.

### யூலை 23. மட்டக்களப்பு.

கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் தமது வகுப்புக்களைப் பகிஸ்கரித்து போராட்டத்தில் குதித்தனர். பலநூற்றுக்கணக்கான மாணவர்கள் பதாகைகளைத் தாங்கி, வீதிமறியல் போராட்டம் நடத்தினர்.

சந்திரிகா அரசே! வன்னிப்போக்குவரத்தை ஏற்படுத்தி பட்டினிச்சாவைத் தடு.

மூன்றாம் தரப்பு மத்தியத்துவத்துடன் விடுதலைப் புலிகளுடன் பேசி அரசியல்தீர்வைக் காண்.

போன்ற கோசங்களை எழுப்பி போராட்டம் நடத்தினர்.

### யூலை 26. வவுனியா.

வன்னியில் சிக்குண்ட அரசாங்க உத்தியோகத்தர்கள், வர்த்தகர்கள் பொதுமக்கள் சுமார் ஐந்நூறுக்கு மேற்பட்ட மக்கள் திரண்டு வவுனியா செயலகத்திற்கு முன்னால் சத்தியாக்கிரகப் போராட்டம் நடத்தினர்.

எமக்கு சாப்பாடுவேண்டாம். பாதையைத்திறந்து விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள எமது வீடுகளுக்குச் செல்ல எம்மை அனுமதியுங்கள்.

இதுவே சிக்குண்ட மக்கள் வவுனியா அரசாங்க அதிபரிடம் விடுத்த கோரிக்கையாக இருந்தது.

### யூலை 26. யாழ்ப்பாணம்.

வன்னிப் பாதையைத் திற!

பட்டினிச் சாவைத்தடு!

க.பொ.த. உயர்தரவகுப்பு மாணவர்களின் பரீட்சையை சுமூகமாக நடத்து!

இந்தக் கோசங்களுடன் யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் போராட்டத்தில் குதித்தனர். பலநூற்றுக்கணக்கான மாணவர்கள், வளாகத்தில் திரண்டு பேரணியாகப்புறப்பட்டனர். யாழ். செயலகத்தை நோக்கி அவர்கள் புறப்பட்டுச் சென்றவேளை, பரமேஸ்வராக்கல்லூரிச் சந்தியில் அவர்கள் சிங்களப்படையினரால் தடுத்துநிறுத்தப்பட்டனர். எனினும், யாழ். உதவி அரசாங்க அதிபர், அவ்விடம் சென்று மாணவர்களின் மனுவை பெற்றுக்கொண்டார்.

### யூலை 29. வவுனியா.

மூன்று பல்கலைக்கழக மாணவர் சங்கங்கள் இணைந்து போராட்டம் நடத்தின. பலநூற்றுக்கணக்கான பல்கலைக்கழக மாணவர்களுடன் பொதுமக்களும் கலந்துகொண்டனர். வன்னிப் பாதையைத் திறந்து உணவு மருந்து அனுப்புவதுடன், உயர்வகுப்பு மாணவர்களின் பரீட்சைக்கு உரிய ஏற்பாட்டைச் செய்யுமாறு வலியுறுத்தும் மகஜர் ஒன்றை சிறீலங்கா சனாதிபதி சந்திரிகாவிற்கு முகவரியிட்டு, வவுனியா அரசாங்க அதிபரிடம் அவர்கள் கையளித்தனர்.

வவுனியா மாவட்ட பல்கலைக்கழக மாணவர்சங்கம்.

வவுனியா பல்கலைககழக மாணவர்சங்கம்.

கிழக்குப்பல்கலைக்கழக மாணவர் சங்கம்.

ஆகியவையே இப்போராட்டத்தை ஒழுங்கு செய்திருந்தன.

### யூலை 30. கொழும்பு.

கொழும்பு பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்கள் முதல்முதலாக வன்னி மக்களுக்காக போராட்டத்தில் குதித்தனர். தமிழ் முஸ்லீம் மாணவர்களுடன் சிங்கள மாணவர்களும் இப்போராட்டத்தில் கலந்துகொண்டனர். போக்குவரத்துத்தடையை நீக்கி, உணவு மருந்து மற்றும் பரீட்சைக்கு ஆவன செய்யுமாறு, சந்திரிகாஅரசை வலியுறுத்தி, பல்கலைக்கழக வளாகத்தின் முன், காலையில் இருந்து மதியம்வரை மறியல் போராட்டம் நடத்தினர்.

### யூலை 30. வவுனியா.

வவுனியாவிலுள்ள ஐந்து பாடசாலைகளைச் சேர்ந்த உயர்வகுப்பு மாணவர்கள், வவுனியாச் செலகத்தை முற்றுகையிட்டனர். 'வன்னிக்கான போக்குவரத்தை உடன் எற்படுத்து.' 'உணவு, மருந்தை அனுப்பி மக்களைக் பாதுகார்.' 'மாணவர்களின் கல்விக்கு கேடுவிளைவிக்காதே' என்று முழங்கினர். நீண்டகாலமாகப் போராட்டம் நடத்திவருகின்றபோதும், அரசாங்கம் தமிழ் மக்கள் பிரச்சினையை அலட்சியப்படுத்திவருவதால் ஆத்திரம் கொண்ட மாணவர்கள் அங்கிருந்த யன்னல்களை உடைத்தனர், பூச்சாடிகளை நொறுக்கினர். மேலதிக அரசாங்க அதிபர் ரகுநாதபிள்ளையிடம் மகஜர் ஒன்றும் கையளித்தனர்.

### வன்னியில்.

சுமார் இரண்டு வாரங்களாக வன்னியில், போக்குவரத்துப் பாதையைத் திறக்கவும், மற்றும் உணவு, மருந்து விநியோகத்தை மேற்கொள்ளவும் அரசாங்கத்தை வலியுறுத்துமாறும், அழுத்தத்தைப் பிரயோகிக்குமாறும் கோரி, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் ஐக்கிய நாடுகள் அகதிகள் உயர் ஸ்தானிகராலயம் ஆகியவற்றின் மல்லாவி அலுவலகங்கள் மக்களால் முற்றுகையிடப்பட்டன. மக்கள் தொடர்ந்து போராட்டம் நடத்தினர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சிங்களப் படைகள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தங்கள் தேசத் தலைவர் மேதகு பிரபாகரன் அவர்களின் உருவப்படத்தின் பின்னணியில் நடையிடத் தொடங்கிய தமிழீழ மக்கள் தங்கள் கலை கலாச்சார தன்மைகளூடாகவும் சிறிலங்காவின் அரச பயங்கரவாதத்தை, ஆக்கிரமிப்பு கொடுமைகளை இராணுவவாதத்தை அதன் விளைச்சலான மனிதாயத்துக்கு எதிரான குற்றங்களை விளக்கிச் செல்ல மறக்கவில்லை. நாகர் கோவிலில் படித்துக் கொண்டிருந்த பள்ளி மாணவர்கள் மேல் குண்டு போட்டு சந்திரிகா இனஅழிப்பு செய்த பொழுது அந்த இளம் உயிர்களைப் பறிகொடுத்த தாய்மார் நெஞ்சு வெடித்து புலம்பியழுத வரலாற்று வேதனையை காட்சியாக்கிச் சென்ற அலங்கார ஊர்தி கண்டவர் நெஞ்சைப் பிழிந்தெடுத்தது. செம்மணி மரணப் புதைகுழிகள் சந்திரிகா வழங்கிய சமாதானப் பரிசாக அலங்கார ஊர்தியில் பவனி வந்தன. நாதஸ்வர இசை வெள்ளத்தில் ஜெனிவா நகர வீதிகள் மூழ்க தமிழ்க்கலைகளான பொய்க்கால் குதிரையாட்டங்கள் - வண்ண வண்ண கூத்துடைகள் அணிந்த கலைஞர்களின் கூத்துக்கள்-நடனங்களுடன் அசைந்து சென்ற ஊர்வலத்தின் ஒவ்வொரு அம்சமும் தமிழீழ மக்களின் இன்னல்களை சர்வதேச காட்சி




நடையிட்ட இந்தப் பேரணியினூடாக சிங்களப் பெரும்பான்மை அரசாங்கம் தமிழீழ மக்களுக்கு இழைத்து வரும் பெரும் மனித வதைகளை புரிந்து கொண்டதுடன் தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தின் தேவையையும் சட்டபூர்வத் தன்மையையும் விளங்கிக் கொண்டனர். 4-15 மணிக்கு ஊர்வலம் சர்வதேச முன்றல் என் வர்ணிக்கப்படும் ஐக்கிய நாடுகள் சபை முன்றலை வந்தபின. பொதுக் கூட்டம் 4.40 மணிக்கு ஆரம்பமாகியது.

இந்த நூற்றாண்டின் இறுதி தடவையாகத் தமிழீழத் தேசக் கொடி ஐக்கிய நாடுகள் சபை முன்றலில் ஏற்றப்பட்ட பொழுது இங்கு திரண்டிருந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் 21ஆம் நூற்றாண்டில் எங்கள் தமிழீழத் தேசக் கொடியினை ஐக்கிய நாடுகள் சபையின் உள்ளே ஏற்றும் பொற்



தமிழீழத் தேசிய கீதத்தை இசைத்து தங்கள் அதிஉயர் மரியாதையை மாவீரர் தியாகங்களால் மலர்ந்த தங்கள் தேசக் கொடிக்குச் செலுத்தினர். 20ஆம் நூற்றாண்டின் இறுதித் தடவையாக ஐக்கிய நாடுகள் சபை முன்பாக ஏறும் இந்தத் தேசக் கொடி 21ஆம் நூற்றாண்டில் ஐக்கிய நாடுகள் சபையின் உள்ளே ஏறும் இனிய காட்சியை மனக்கண்ணில் எதிர்வு கண்டு நின்ற மக்களை தமிழீழத் தேசத்தின் மீள் விடுதலைக்காக தங்கள் இன்னுயிர்களை அர்ப்பணித்த மாவீரர்களுக்கும் மக்களுக்கும் அமைதி வணக்கம் செய்யுமாறு விடுக்கப்பட்ட அழைப்பு நனவுலகிற்கு கொண்டு





பொருளாக்கின. தங்கமாமணித் தமிழீழத்தின் தங்கம் நிகர்த்த தேசத்தலைவன் தமிழீழ மக்கள் அன்பாளன் மேதகு பிரபாகரன் அவர்களின முழு அளவிலான உருவப்படத்தை தாங்கிச் சென்ற பேரணி அம்மக்கள் தலைவனின் தலைமையில் தமிழீழ மக்கள் அணிவகுத்து வெற்றி நடையிட்டு 21ஆம் நூற்றாண்டில் தமிழீழத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றனர் என்ற உண்மையை அரசியல் யதார்த்தத்தை உலகிற்கு தெளிவாக எடுத்துக் காட்டியது. மிகப் பெரிய தமிழீழத் தேசக் கொடியினைத் தாங்கிச் சென்ற மக்கள் அணி அந்த தேசியக் கொடி ஐக்கிய நாடுகள் சபையில் சுதந்திரக் கொடியாகப் பறக்கும் நேரத்திலேயே தமிழீழ மக்கள் பாதுகாப்பான அமைதியில் வாழத் தொடங்குவர் என்ற உண்மையை உணர்த்திச் சென்றது. 'உணவை ஆயுதமாக்காதே' - 'பாலியல் வல்லுறவை ஆயுதமாக்காதே' - 'வன்னிக்கு உடன் உணவை அனுப்பு' போன்ற பாதாகைகளும் மக்களால் எடுத்துச் செல்லப்பட்டன. எல்லா மக்களும் கைகளில் தேசியக் கொடியினைத் தாங்கி நடந்தனர். அவர்கள் அணிந்திருந்த தொப்பியில் தேசியக் கொடியும் தேசத்தலைவர் படமும் பொறிக்கப்பட்டிருந்தது. ஜெனிவா நகரில் திரண்டிருந்த சர்வதேச மக்கள் தேச நேசத்துடன் விறுடைந்தது. தமிழீழ மக்கள் நீதி கேட்டு பாண்டியன் அவை முன் நின்ற கண்ணகியின் பிரதி விம்பங்களாக ஐக்கிய நாடுகள் சபை முன்றலில் காட்சியளித்தனர்.

மக்கள் நடந்த களையாற குளிர்பானங்கள் வழங்கப்பட்ட நேரத்தில் கூட்ட மேடையில் தவில் நாதஸ்வர கச்சேரி, வயலின் இசை, தபேலா மிருதங்க கச்சேரிகள் ஆகியன எழுச்சி இசைகளாகத் தமிழீழ விடுதலை பாடல்களின் மெட்டுக்களை எழுப்



காலத்தை உருவாக்குவோம் என ஆணையிட்டு உறுதி கொண்டனர். தமிழீழ விடுதலைப் புலிகளின் சுவிஸ் பணியகத்தின் சார்பில் திரு. குலம் அவர்களால் தமிழீழத் தேசக் கொடி தமிழீழ மக்களின் பலத்த கரஒலி முழக்கத்திற்கு இடையில் ஐக்கிய நாடுகள் சபையின் கம்பீரமான கட்டிடத்திற்கு எதிரே வான்வெளியில் ஏற்றி வைக்கப்பட்டது. தமிழீழத் திருநாட்டின் மணிக்கொடி வான் நோக்கி உயர்கையில் மக்கள் வந்தது. ஆடாமல் அசையாமல் எழுந்து நின்று மக்கள் அமைதி வணக்கம் செய்த நேரத்தில் ஐக்கிய நாடுகள் சபை முன்றல் பரிபூரண அமைதியில் குளித்தது. திரண்டிருந்த பல்லாயிரக்கணக்கான தமிழீழ மக்களை நோக்கி சுவிஸ் பாராளுமன்ற உறுப்பினர் அஞ்சலினா பங்கேஸர் (Ms. Angelina Fankhauser) அவர்கள் உரையாற்றத் தொடங்கினார். அவர் தமது உரையில் 'மனித உரிமைகள் நிலைநாட்டப்பட வேண்டியதன் முக்கியத்துவத்தை உலகிற்கு உரத்த குரலில் உரைப்பதற்காக களைப்பற்றவர்களாக மீண்டும் இங்கே கூடியிருக்கின்றோம். தங்களுடைய உரிமைகளுக்காகப் போராடும் மக்கள் அனுபவிக்கும் பயங்கரமான கொடுமைகளைப் பார்த்துக் கொண்டு எந்த அரசாங்கமும் அமைப்புக்களும் குடிமக்களும் கண்களை மூடிக்கொண்டு இருக்க முடியாது. சித்திரவதைகள் காரணமற்ற கைதுகள் காணாமல் போக்கப்படுதல்கள் மனிதப் புதைகுழிகள் போன்ற எல்லா வன்முறை வடிவங்களும் உடன் நிறுத்தப்படல் வேண்டும். எதையும் இழக்காத வகையில் போராட்டத்தில் சம்பந்தப்பட்டவர்கள் கூடிப் பேசி எல்லா மக்களுக்கும் ஏற்படைய ஒரு அரசியல் தீர்வை ஏற்படுத்தக் கூடிய வகையில் சர்வதேச சமூகம் ஒன்றுபட்டு பேச்சுவார்த்




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net



# வெளியேறட்டும்!







தைக்கான ஆயத்தங்கள் நடைபெற உதவ வேண்டும்.

விருப்பப்பட்டால் இவ்விடயத்தில் உதவுவதற்கு சுவிஸ்லாந்து தான் ஆயத்தமாக இருப்பதாக பலதடவைகள் தனது விருப்பை வெளியிட்டுள்ளது. அதிகமான நாடுகள் அரசியல் பேச்சுவார்த்தைக்கான ஆரம்பங்களில் உதவுவதற்கு தயாராக இருப்பது சமதானத்திற்கான சந்தர்ப்பங்களை அதிகரிக்க உதவும். ஒவ்வொரு நாட்டினையும் பொறுத்தவரை அவை அடிப்படை மனித உரிமைகளைப் பேணக் கடமைப்பட்டுள்ளன. இல்லையேல் அடிப்படை மனித உரிமை என்ற தத்துவமே

பட்டவர்களாக மட்டும் பார்க்காது அவர்கள் குடிகள் என்ற வகையில் அவர்களது நாட்டின் எதிர்காலத்திற்கும் உதவக் கூடிய வகையில் செயற்படல் வேண்டும்' என்றார்.

இவரைத் தொடர்ந்து தமிழீழத்தின் பெருங்கல்விமான்களில் ஒருவராகிய யாழ். மறைமாவட்ட முன்னாள் குரு முதல்வர் அருட்திரு கலாநிதி எஸ்.ஜே. இம்மனுவேல் அடிகள் உரை நிகழ்த்தினார். இவரது

அடுத்து வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அமைதிப் பேரணி பிரகடனம் ஆரம்பமாகியது. திரு. அன்ரன் பொன்ராஜா அவர்கள் பிரகடனத்தை சொல்ல கூடியிருந்த மக்கள் பெரு வெள்ளம் அதனை திருப்பிக் கூறி தமது பிரகடனமாக மாற்றினர். இதனால் ஐக்கிய நாடுகள் சபை முன்றல் சில நிமிடங்களுக்கு தமிழீழ மக்கள் குரலால் அதிர்ந்து ஐக்கிய நாடுகள் சபையில் எதிரொலி எழுப்பியது. இறுதியில் இப்பிரகடனமும் மனுவொன்றும் ஐக்கிய நாடுகள் சபைக்கும் அதன் உறுப்பு நாடுகளின் தலைவர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டது.

மக்கள் பிரகடனத்தை அடுத்து அமெரிக்க மனித உரிமைச் சட்டத்தரணி திருமதி கரன் பார்க்கர் அவர்களின் உரை இடம் பெற்றது. தொடர்ந்து பிரித்தானிய மனித

உரிமை செயற்பாட்டாளர் செல்வி டியெற்றி மக்கொனல் உரை நிகழ்த்தினார். இவர் தனது உரையின் இறுதியில் 'நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும்' என்ற தேச விடுதலைக் கீதத்தின் முதல் இரு வரிகளை தமிழில் பாடினார். அதனை அடுத்து விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகத்தினரால் 'நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும்' மேடையில் பாடப்பட அனைத்து மக்களும் அதில் இணைந்து எழுச்சி பொங்க தங்கள் இதயத்தின் அசைக்க முடியா நம்பிக்கையை பாடல் வரிகளாக ஐக்கிய நாடுகள் சபைக் காற்றில் கலக்கச் செய்தனர். அந்த மக்கள் நம்பிக்கை மூச்சில் தமிழீழத் தேசியக் கொடி ஐக்கிய நாடுகள் சபையில் கம்பீரமாகப் பறந்த அந்த வரலாற்று பெருமை மிகு சம்பவத்துடன் பேரணி முற்றுப் பெற்றது. மக்கள் அனைவரும் எழுந்து நின்று அமைதி காக்க தமிழீழத் தேசக் கொடி இறக்கப்பட்டு இருபதாம் நூற்றாண்டின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஐ.நா. பேரணி முடிவுற்றது. அந்தப் பேரணி தந்த புத்துணர்வுடன் தமிழீழத் திருநாட்டின் விடுதலைக்காக உழைப்போம், உதவிகள் கொடுப்போம் என்ற நெஞ்சுறுதியுடன் தமிழீழ மக்கள் ஐ.நா. முன்றலில் இருந்து புறப்பட்டனர்.



ஆபத்துகளுக்கு உள்ளாகி அதன் விழுமியங்கள் அர்த்தமற்ற ஒன்றாகி விடும்.

பெண்களும் குழந்தைகளும் இந்தப் போராட்டத்தினால் மிக அதிக பாதிப்புகளுக்கு உள்ளாகியுள்ளனர். இவர்களுடைய இந்த பாதிப்புக்கள் ஆயுதங்களால் தீர்க்கப்படாது அரசியல் தீர்வுகள் மூலம் தீர்க்கப்படல் வேண்டும். போதிய அளவு மனிதாய உதவிகள் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உடன் அனுப்பிவைக்கப்படுவதுடன் உதவி செய்ய விரும்பும் பணியாளர்கள் எவ்வித தடையுமின்றி அங்கு போய் பணியாற்ற அனுமதிக்கப்படல் வேண்டும். இவை தொடர்பான அடிப்படையான சர்வதேச உடன்பாடுகள் அங்கு உடன் அமுலாக்கப்படல் வேண்டும்.

ஒவ்வொரு அரசாங்கங்களும் நடைமுறையில் பேச்சுவார்த்தைக்கான சூழ்நிலைகள் தோன்றக் கூடிய வகையில் அழுத்தங்களை கொடுத்து பணியாற்ற வேண்டும்." இதன் மூலமே வன்முறைகள் நடைபெறாது தடுக்கலாம். சுவிஸ்லாந்து அகதிகள் உண்மையான ஜனநாயக பங்களிப்புக்களை செய்யக்கூடிய வகையில் எதிர்காலத்தைக் கட்டி எழுப்ப வேண்டும். இந்த நாட்டில் பாதுகாப்பைக் கோரும் ஒருவருக்கு அதற்குரியவற்றைச் செய்து கொடுத்து பராமரிக்க வேண்டிய பாதிக்கப்

எழுச்சி உரையினைத் தொடர்ந்து சுவிஸ் பணியகத்தின் கலை பண்பாட்டுக் கழகம் 'தாயக வித்து' என்ற இசைத்தட்டினை இரண்டாம் வெளியீடாக வெளியிட்டு வைத்தனர். இவ் இசைத்தட்டு ஜெனிவாக் கன்ரோன் பொறுப்பாளர் திரு. சிறி யினால் வெளியிடப்பட மகளிர் அணிப் பொறுப்பாளர் திருமதி லீலா அவர்களால் முதல் வெளியீடு பெறப்பட்டது. இவ் இசைத் தட்டை உருவாக்கியவர்களுக்கு அருட்தந்தை இம்மனுவேல் அடிகள் இசைத் தட்டினை பரிசளித்துக் கௌரவித்தார்.

அதைத் தொடர்ந்து இந்தப் பேரணிக்கு வருவதாக இருந்து உடல்நலக் குறைவால் சமூகமளிக்க முடியாது போன விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்களின் உடல் நலனுக்காகவும் ஊர்வலத்திற்கான ஊர்தி செய்து கொண்டு வரும் பொழுது வீதி விபத்துக்கு உள்ளாகி மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் சுவிஸ் பணியக பணியாளர்க்காகவும் அருட்திரு இம்மனுவேல் அடிகள் சிறு பிரார்த்தனை ஒன்று செய்தார்.

அதை அடுத்து விடுதலைப் புலிகளின் அனைத்துலகச் செயலகத்தின் சார்பில் திரு. சிவா அவர்கள் உரைநிகழ்த்தினார். இவரது உணர்வு பூர்வமான உரையினை

## பேரணியில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

★ சிறீலங்கா அரசு உணவையும், மருந்தையும், போராயுதமாக பயன்படுத்தி தமிழ் மக்களை பட்டினிச்சாவிற்கு உட்படுத்தி தனது இன அழிப்பு நடவடிக்கையை கூட்டியுள்ளது. இதை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

★ கடந்த 50 வருடங்களுக்கு மேலாக தமிழர் தாயகப் பகுதியில் தமிழின அழிப்பை நடாத்திக் கொண்டிருக்கும் சிறீலங்காப்படைகளும், கைக் கூலிகளும் தமிழர் பகுதிகளைவிட்டு முற்றாக வெளியேற வேண்டும்.

★ சிறீலங்கா அரசின் திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களாலும், மண் பறிப்புக்களாலும் ஆக்கிரமிப்புக்கு உள்ளாக்கப்பட்டும், துண்டாடப்பட்டும் வரும் தமிழர் தாயகப் பகுதியான தமிழீழத்தை தமிழரின் தாயகம் என அனைத்துலகம் அங்கீகரிக்க வேண்டும்.

★ மனித உரிமைகள் சாசனத்தில் உள்ள அனைத்து மக்களுக்கும் உரியதான தேசிய சுயநிர்ணய உரிமை தமிழ் மக்களுக்கு உண்டு என்பதையும் அனைத்துலகமும் அங்கீகரிக்க வேண்டும்.

★ தமிழீழமக்கள் சார்பான எந்த அரசியல் விடயங்களையும் தமிழீழ மக்களின் ஏக பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகளுடன் மட்டமே பேசித் தீர்க்கவேண்டும்.

★ சிறீலங்கா அரசும், தமிழீழ அரசும் இலங்கைத்தீவில் போரை நிறுத்தி நீதியான நிரந்தர சமாதானத்தை கொண்டுவர உண்மைக்கும், நீதிக்கும் ஆதரவு கொடுக்கும் மூன்றாம் தரப்பு உதவி செய்ய வேண்டும். அல்லது இறைமையுள்ள சுதந்திர தமிழீழத்தை அங்கீகரிக்க வேண்டும்.

★ மேற்குலக நாடுகளில் சிறீலங்கா அரச பயங்கரவாதத்தால் புலம் பெயர்ந்து அகதிகளாக வந்த தமிழ் மக்களை, இலங்கைத் தீவில் ஓர் நிரந்தர அமைதி கிட்டும் வரை திருப்பி அனுப்புதல் நிறுத்தப்பட வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# கடலன்னையின் குழந்தை

## கரும்புலி கப்டன் அங்கயற்கண்ணி

உயரஉயர அலைகளை வீசியெறியும் கடலுடன் நெருங்கிய நேசமான உறவை வைத்திருக்கும் அந்தக் கடற்கரை. ஒரே வெண்மணல் பிரதேசம்.

சாதாரணமாக எந்தவொரு இளம் பெண்ணுக்கும் இந்த வெண்மணற் பரப்பைப் பார்த்தால், தோழியருடன் ஓடிப்பிடித்து விளையாடத்தோன்றும்.

கால்களைப் புதைய வைக்கும் அந்தக் கடற்கரை மணலிலே உறுதியாகக் காலடிகளைப் பதித்தவாறு கடற்பரப்பிலிருந்து கரையை நோக்கி வேகமாக வீசும் காற்றை ஊடறுத்தவாறு, நீச்சல் பயிற்சியில் ஈடுபடுவதற்காக கடற்புலிகள் மகளிர் படையணி கடலை நோக்கி நடந்து கொண்டிருந்தது. பெரும்மலையையே புரட்டிவிடுவது போன்ற வேகத்துடன் உயரக் கிளம்பி, 'வாருங்கள் வீராங்கனைகளே, வணக்கம்' என்று இவர்களை நோக்கி கூறிப்பணிவது போன்று அலைகள் கீழே விழும். எத்தனை தரமும் மேலே மேலே எழுந்து விழுவதில் அந்த அலைகளுக்குச் சலிப்பதில்லை. அந்த அலை நடுவே நீந்திச் செல்வதில் பெண்புலிகளும் சளைப்பதில்லை.

திடீரென கடலின் மேற்பரப்பில் ஏதோ பரபரப்பு. மீனவர்களின் படகுகள் வேக வேகமாக கரையைநோக்கித் திருப்பப்பட்டன. சிலர் படகுகளை, வலைகளை விட்டு விட்டு நீரில் குதித்து நீந்த முயல்வது தெரிந்தது. மேற்கடலிலே எதிரியின் டோராப் படகுகள் துரத்துகின்றன போலும். அப்படித்தான் இருக்கவேண்டும். கடற்புலிகளை எதிர்நோக்குவதைத் தவிர்த்துக் கொள்வதற்காக இப்போதெல்லாம் எதிரியின் கடற் படகுகள் மேற்கடலிலேயே நின்று தாக்கிவிட்டு ஓடுவதுதான் வழமையாகிவிட்டிருந்தது.

படகுகளுடன் திரும்பியவர்களும் எல்லாவற்றையும் கடலிலேயே விட்டுவிட்டு உயிரைமட்டும் காப்பாற்றி நீந்தி வந்தவர்களும் போக ஏனையோர்......

அலையடித்து ஒவ்வொரு உடல்களையும் கரையில் கொண்டு வந்து தள்ளியது. மீனவ குடும்பங்களின் கண்ணீர் அலை கடலுடன் சேர்ந்து வந்து கொண்டிருந்தது.

நீச்சல் பயிற்சியில் ஈடுபடவென கரைக்கு வந்த பெண் புலிகளின் மனம், ஏழைகளின் கண்ணீரில் இளகியது. அனுதாபத்துடன், அந்த மக்களின் நிலைபற்றித் தமக்குள் பேசிக்கொண்டார்கள். அங்கயற்கண்ணியின் மனம் இறுகிப் பாறையானது.

'இவங்களுக்கு இதுக்கு ஒரு சரியான பதிலடி குடுக்கவேணும்'

அந்த நிமிடத்திலேயே மனதளவில் அவள் ஒரு கரும்புலியானாள். இலங்கைக் கடற்படைக்கப்பல் ஒன்றைக் கரும்புலித் தாக்குதல் மூலம் அழிக்கவேண்டும் என்ற எண்ணம் அப்போதுதான் அவளுள் ஆழமாக வேரோடியிருக்க வேண்டும்.

தொடர்ந்தும் எமது மக்கள் இலங்கைக் கடற்படையின் தாக்குதலுக்கு அஞ்சி, எல்லாவற்றையும் விட்டுவிட்டு ஓடி வருவதும், அன்று முழுவதும் (வருமானம் இல்லாததால்) ஒரு வேளைக் கஞ்சிகூடக் குடிக்க வழியில்லாமல் பசியுடன் அழும் தம் குழந்தைகளை சமாதானம் பண்ணமுடியாமல் தமக்குள்ளேயே கண்ணீர்விடும் ஏழைத் தாய்களையும் ஏழைத் தந்தைகளையும் அடிக்கடி காண நேர்ந்த போதெல்லாம் தான் எடுத்த முடிவில் மேலும் உறுதி பெற்றாள் அவள்.

தான் ஒரு கரும்புலியாகப் போகவிரும்புவதை தலைவருக்குத் தெரியப்படுத்தினாள்.

சரியாக எட்டு மணித்தியாலமும் இருபத்தேழு நிமிடங்களும் அங்கையற்கண்ணி பதினேழு கடல்மைல்களை (ஏறத்தாழ முப்பத்தைந்து கிலோ மீற்றர்கள்) நீந்திக்கடந்து விட்டாள். பொறுப்பாளர்களுக்கு அவள் மேல் என்னவென்று சொல்ல முடியாத ஒரு பிரியம். கடற் கரும்புலிகளிற்குரிய பயிற்சியில் ஈடுபடத் தொடங்கிய நாளிலிருந்து அவள் அந்தக் கடுமையான பயிற்சிகளில் மிகத் திறமையாக ஈடுபட்டது எல்லோருக்குமே திருப்தியைத் தந்தது. கொடுக்கப்படும் இலக்கை அவளால் சரியாகத் தாக்க முடியும் என்பதில் யாருக்குமே சந்தேகம் இருக்கவில்லை.

காங்கேசன்துறைத் துறைமுகத்தில் நாற்பத்தைந்து அடி ஆழுங்கொண்ட நீர்ப்பரப்பில் நிலைகொண்டிருந்த வடபகுதி தலைமையகக் கப்பலை யாராலுமே தாக்க மடியாது என்பதில் எந்தக் கடற்படை அதிகாரிக்குமே சந்தேகம் இருக்கவில்லை.

ஆறாயிரத்து முந்நூறு தொன் எடையைக் கொள்ளக் கூடியதும், 326.04 அடி நீளமும் 51.02 அடி அகலமும் கொண்டதும், அதி சக்தி வாய்ந்த ராடர்கள் பொருத்தப் பட்டதுமான நீரில் மிதக்கும், நடமாடும் தலைமையகக் கடற்படைக் கப்பலை ஒரு தனி மனிதனால் அழிக்கமுடியும் என்று அவர்கள் கனவில் கூட நினைத்திருக்கவில்லை என்பது பரிபூரண உண்மை.

கடற்புலிகள் மகளிர் படையணியின் மூன்றாவது பயிற்சிப் பாசறையில் பயிற்சி எடுத்த அங்கையற்கண்ணியிடம் இயல்பாகவே ஆளுமைத்தன்மையிருந்தது. ஆரம்பத்திலிருந்து அவள் குழுத் தலைவியகவே இருந்து வந்தாள். கடற்புலிகளின் ஆண் - பெண் போராளிகளிடையே நடாத்தப்பட்ட போட்டி ஒன்றில் முதலாவதாக வந்தாள். விளையாட்டிலே கெட்டிக்காரியாக இருந்தாள்.

ஆனால் வீட்டிலிருக்கும் வரை இதற்கு நேர்மாறான இயல்பைக் கொண்டிருந்தாள். இரவிலே தனியாக வெளியே போக மாட்டாள். எதற்கும் அம்மாவின் துணை வேண்டும் அவளுக்கு. என்று, தான் ஒரு புலியாக வேண்டும் என்று எண்ணிப் புறப்பட்டாளோ, அன்று அவளுள் மறைந்திருந்த ஆளுமை வெளிவந்தது.

லெப்.கேணல். பாமாவுக்கும் மேஜர் சுகன்யாவுக்கும் இவளை முழுமையாகத் தெரியும். அவர்கள் இருவருடனும்தான் அவள் நீண்ட காலம் நின்றிருக்கின்றாள். வரலாற்றுப் புகழ் மிக்க 'தவளை நடவடிக்கை'யின்போது இவள் லெப். கேணல். பாமாவின் குழுவில் ஒருத்தியாக கடற் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தாள். அவளது நடவடிக்கைகள், பண்புகள், எந்தப் பொறுப்பையுமே அவளிடம் நம்பிக் கொடுக்கலாம். என்ற நம்பிக்கையை எல்லோரிடமும் ஏற்படுத்திவிட்டிருந்தன.

இயக்கத்தோடு இணைந்தபின்னர் ஒரு முறை அவள் விடுமுறையிலே வீடு சென்றிருந்தாள். தாயும் தந்தையும் சகோதரர்களும் காட்டிய பாசத்திலே நனைந்தவள்.

'நீங்களெல்லாரும் நல்லாப்படிக்க வேணும். படிச்சு முன்னுக்கு வரவேணும்'

என்றே தன் சகோதரர்களிடம் சொன்னாளாம்.

'நான் காத்தோடை காத்தாப்போயிடுவன் அம்மா' என்று தாயிடம் சொன்னாளாம்.

எதற்காக தன் மகள் அப்படிச் சொன்னாள் என்பதை, தன் மகளை இழந்த பின்னர்தான் அந்த அன்பான அம்மாவால் புரிந்து கொள்ளமுடிந்தது.

'பருந்திட்ட இருந்து தன்ர குஞ்சுகளைத் தாய்க்கோழி காக்கிறமாதிரி வேலணையிலிருந்து நான் பத்திரமாகக் கூட்டி வந்த பிள்ளை'

என்று சொல்லிச் சொல்லி அழுது களைத்துவிட்டாள் அம்மா. எப்படித் தன் மகளால் இப்படியொரு சாதனையைச் செய்ய முடிந்தது என்று தன்னிடமே கேட்டுக் கொள்கின்றாள் அவள். சொந்த வீடுவாசல், காணிகளை வேலணையில் இலங்கை இராணுவத்திடம் இழந்து ஏதிலியாக நிற்கும் அவளால், இரவிலே வெளியே போகும் போது மகளுக்குத் துணைபோன அவளால் தன் மகளின் வீரத்தை ஆச்சரியத்துடன் பார்க்க முடிந்தது.

கரும்புலித் தாக்குதலுக்கான பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது தன் தோழிகளிடம்,



'நான் நல்லூரில திருவிழா நடக்கிற நேரம்தான் சாக வேணும், அப்பதான் திருவிழாவில அம்மா கச்சான் வித்து வந்த காசு இருக்கும். அந்தக் காசு இருந்தாத்தான், என்ர நினைவு நாளுக்கு வீட்டை போற பிள்ளைகளுக்கு (சகபெண் போராளிகளுக்கு) அம்மாவாலை சாப்பாடு கொடுக்க ஏலும்'

என்று அடிக்கடி சொல்வாளாம். அவளின் தோழிகளின் ஒவ்வொருவரின் மனதிலும் அங்கையற்கண்ணியின் இந்த வசனம், கல்லிலே செதுக்கியது போலத் தெளிவாகப் பதிவாகியிருக்கிறது. எத்தனை தரம் கேட்டாலும் அவர்கள் திருப்பித்திருப்பிச் சொல்கிறார்கள்.

எல்லாம் தயார்.

கடற் புலிகள் மகளிர் படையணியின் சிறப்புத் தளபதி லெப்.கேணல். நளாயினி அவர்கள், அங்கையற்கண்ணியிடம்

'என்னம்மா, ஏதாவது சொல்ல நினைக்கிறாயா?' என்று கேட்டார்.

தயக்கமில்லாமல் மிகத் தெளிவாக அங்கையற்கண்ணியிடமிருந்து பதில் வந்தது.

'உங்கட அன்பும் அண்ணையின்ர (தலைவரின்) அன்பும் எப்பவும் எனக்கு இருக்க வேணும்'

தாயை நேசிப்பதையும் விட அதற்கு மேலாக தலைவரையும் தன்னை வளர்த்து விட்ட பொறுப்பாளர்களையும் தாயகத்தையும் நேசிப்பவர்கள்தான் கரும் புலிகள்.

அங்கையற்கண்ணியை கடற்கரை வரை சிலர் வழியனுப்ப அதன் பின்னரும் விடாது சில போராளிகள் அவளுடனேயே நீந்தி ஒரு குறிப்பிட்ட தூரம் வரை வழியனுப்ப அதன் பின்னரும் இலக்கிலிருந்து ஒரு குறிப்பிட்ட தொலைவு வரை வந்து பிரியாவிடை கொடுத்தனர் சக போராளிகள்.

'இலக்கை அடிக்காம நான் திரும்ப மாட்டேன்'

என்று சொல்லிவிட்டு அங்கையற்கண்ணி விடைபெற்றாள். தூரத்தே அவளது அசைவுகள் தெரியும் தூரம் வரை, அதன் பின்னரும் க்ண்கள் வலிக்கவலிக்க வெறும் அலைகளை உற்றுப் பார்த்துக் கொண்டேயிருந்து விட்டு ஏனையவர்கள் திரும்பினார்கள்.

1994.08.16 அதிகாலை 12.35 மணியளவில் காத்துக்கொண்டிருந்த போராளிகளின் செவியில் பெரும் அதிர்வு. எத்தனையோ மைல்களுக்கப்பால் உறங்கிக் கொண்டிருந்த மக்களின் செவிகளிலேகூட அந்த ஓசை கேட்டதென்றால், காங்கேசன் துறையில் நின்றிருந்த இராணுவத்தினரைப்பற்றிச் சொல்லவா வேண்டும்? எல்லோருக்குமே பரபரப்பு.

தமது கனவுக் கோட்டைகளில் ஒன்று தகர்ந்ததால் இலங்கை இராணுவத் தலைமை பரபரப்படைந்தது.

'எங்கடை பிள்ளையள்தான் எங்கையோ ஆமியை அடிச்சிட்டாங்கள் போல. இன்னும் எவ்வளவு நேரம் கிடக்குது விடியிறத்துக்கு?'

என்று, பத்திரிகையைப் பார்த்துச் செய்தியறிய வேண்டும் என்ற ஆவலில் மளமளவென நடு இரவிலேயே படுக்கையைச் சுருட்டி வைத்தவர்களும்,

'ஆர் பெத்த பிள்ளையோ? எப்பதான் எங்களுக்கும் பிள்ளையளுக்கும் விடியப்போகுதோ?' என்ற ஆதங்கத்துடன் கண்கள் கலங்கியவாறு சுவரோடு சாய்ந்து அமர்ந்து விடியும்வரை விழித்திருந்தவர்களுமாய் மக்கள் பரபரப்படைந்தனர்.

'ரைட். கட்டளைக்கப்பல் அவுட்'

என்று உற்சாகத்துடன் கூறிக் கொண்டாலும், அங்கையற்கண்ணியின் நினைவு எல்லார் மனங்களிலும் மோதியது. போராளிகள் பரபரப்படைந்தனர்.

சீறியெழுந்த அலையை அந்த இருட்டிலேயே மீண்டும் மீண்டும் உற்றுப்பார்த்தார்கள்.

'என்னோடு கலந்துவிட்ட என் மகளை எதற்காக நீங்கள் வீணாகத் தேடுகின்றீர்கள்?'

என்று தம்மைப் பார்த்துக் கேட்பது

(தொடர்ச்சி 13-ம் பக்கம்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






# இராணுவத்தின் போக்குவரத்துத்தடை..

# சிக்குண்டது மக்களல்ல! சந்திரிகா அரசு!!

வன்னிக்கான போக்குவரத்தை தடைசெய்து வைத்துக் கொண்டு, மக்களை பட்டினி நிலைக்கு இட்டுச்சென்று, பாதை திறப்பிற்கு பேரம்பேசி, தமது அடுத்தகட்ட இராணுவ நகர்விற்கு வசதிதேடும் சந்திரிகா தலைமையிலான சிங்களப் படையினரின் கீழ்த்தரமான திட்டம் தோல்வியில் முடிவடைந்துள்ளது. பாதையை மறித்து, விநியோகத்தைத் தடுத்து மக்களை பட்டினி போடுவதன்மூலம், நோய் நொடி மரணங்கள் சம்பவிக்க வைப்பதன்மூலம், விடுதலைப் புலிகளிற்கெதிராக மக்கள் அபிப்பிராயத்தை ஏற்படுத்த சந்திரிகாஅரசு வகுத்துக்கொண்ட திட்டம், தோல்விகண்டது என்பதுடன், நேர்மாறான விளைவுகளையே ஏற்படுத்தியுள்ளன.




சந்திரிகா படையினர், வன்னியின் மேற்குப்புறத்தே ரணகோச இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்து, வன்னிப் பகுதிக்கான போக்குவரத்துப் பாதையைத் தடைபடுத்தினர். யூன் இருபத்தியாறாம் திகதி தடைப்படுத்தப்பட்ட போக்குவரத்துப்பாதை, நாற்பது நாட்களுக்கு மேலாக திறக்கப்படவேயில்லை.

தனது ஒவ்வொருகட்ட இராணுவ நடவடிக்கையின்போதும், போக்குவரத்துப்பாதையையும் நகர்த்தி, ஆக்கிரமிப்பின் முன்னரங்கப்பகுதிக்கு பாதுகாப்புத்தேடும் போக்கையே சிங்களப் படையினர் கைக்கொண்டு வந்துள்ளனர். பொதுமக்களுக்கான போக்குவரத்துப் பாதை என்ற பெயரில், அப்பகுதியில், யுத்தமற்ற சூழ்நிலையை ஏற்படுத்தி, ஆக்கிரமித்த பகுதியில் மண் அணைகளை எழுப்பி, பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பலப்படுத்திக்கொண்டு, தமது அடுத்தகட்ட இராணுவ நடவடிக்கையை மேற்கொள்வதை சிங்களப்படை வழக்கமாக்கிக்கொண்டுள்ளது.

உயிலங்குளத்தினூடான போக்குவரத்தை யூன் இருபத்தியாறாம் திகதி தடைசெய்த சிங்களப் படையினர், வேறு மாற்றுப்பாதைக்கு வழிவகை செய்யாமல், ஒரு மாதத்திற்கு மேலாக காலங்கடத்தி, அதனால் எழுந்த நெருக்கடி நிலையை சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு, தமது இராணுவ ஆதாயத்திற்காக, விடுதலைப் புலிகளிடம் நிபந்தனை விதித்தனர். மாங்குளத்தினூடான போக்குவரத்திற்கு ஒத்துக்கொள்வதாகவும், ஆனால், யுத்தசூனியப் பிரதேசம் என்னும் பெயரில், விடுதலைப் புலிகளின் நிலைகளில் இருந்து விடுதலைப் புலிகளை சிலகிலோ மீற்றர்களுக்கு பின்வாங்கவைக்கும் விதமாய் நிபந்தனை விதித்தனர்.

தமது இராணுவநடவடிக்கைக்காக தாமே மூடிக்கொண்ட போக்குவரத்துப் பாதையை திறக்க சிங்களப் படையினர் விடுதலைப் புலிகளுக்கு நிபந்தனை விதித்தனர்.

இந்த நிபந்தனையை ஏற்றுக்கொண்டு, வழிவிடுவதன் மூலம், ஏற்கெனவே, முடக்கப்பட்ட ஜெயசிக்குறுய் படையினருக்கு, புதிய இரத்தம் பாய்ச்சி, அதன் அடுத்தகட்ட இராணுவ ஆக்கிரமிப்புப் பாய்ச்சலுக்கு வசதியேற்படுத்திக் கொடுத்துவிடுவதாய் அமைந்துவிடும் என விடுதலைப் புலிகள் கருதினர். இராணுவத்திற்குச் சாதகமானதும், விடுதலைப் புலிகளுக்கு பாதகமானதுமான சிங்களப்படையின் நீதிக்குப்புறம்பான நிபந்தனையை விடுதலைப் புலிகள் ஏற்றுக்கொள்ளாமல் நிராகரித்தனர்.

பெரும் இழப்புக்களுக்கு மத்தியில், முயன்று முயன்று முடியாமல்போய், முடக்கப்பட்ட ஜெயசிக்குறுயிற்கு புத்துயிர் கொடுக்கும் விதமாய், மேற்கொள்ளப்பட்ட திட்டமும் தோல்வியில் முடிவடைந்தது.

யூலையின் இறுதியில், மற்றுமொரு கீழ்த்தரமான நடவடிக்கையை சிங்களப் படையினர் மேற்கொண்டனர். சிறீலங்கா சனாதிபதி சந்திரிகாவின் ஒப்புதலுடன், வவுனியா இராணுவத்தளபதியால் இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டது. போக்குவரத்துத்தடையால் வவுனியாவில் சிக்குண்டுள்ள மக்களின் போராட்டத்திற்கு பணிந்து, ஏதோ அவர்களுக்கு நன்மை செய்யப்புறப்பட்ட பாணியில் இந்த நாடகம் நடந்தது. வவுனியாவில் இருந்து முப்பதுக்கு மேற்பட்ட வாகனங்களில் பொதுமக்கள் இரண்டாயிரம் பேர்வரையில் ஏற்றப்பட்டு, மூன்று முறிப்புப் பகுதியில் கொண்டு சென்று இறக்கப்பட்டனர். இராணுவ முன்னரங்கப்பகுதியில் இருந்து, விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிநோக்கி மக்களை எதுவித முன்னேற்பாடுமின்றி, சர்வதேச தொண்டர் அமைப்புக்களின் வழித்துணையுமின்றி, எந்தவிதமான உடன்பாடுகளோ ஒப்பந்தங்களோ எதுவுமின்றி இராணுவத்தினர் மக்களைச் செல்லப்பணித்தனர்.

**தமது இராணுவநடவடிக்கைக்காக தாமே மூடிக்கொண்ட போக்குவரத்துப்பாதையை திறக்க சிங்களப் படையினர் விடுதலைப் புலிகளுக்கு நிபந்தனை விதித்தனர்.**

சிங்களப் படையினர்தான் வருகின்றார்கள் என்று எண்ணி விடுதலைப் புலிகள் சுடுவார்களோ? அல்லது கண்ணி வயல்களில் சிக்கண்டு மக்கள் இறப்பார்களோ? என்று சிங்கள ஆட்சிபீடமும் அதன் இராணுவமும் கொஞ்சமேனும் கவலைகொள்ளவில்லை. ஏனெனில் செல்பவர்கள் தமிழ் மக்கள் என்பதால் சிங்களத்திற்கு அந்தக்கவலை இருக்கவில்லை. அதே வேளை, ஒப்பந்தங்கள் உடன்பாடுகள் இல்லாமல் மக்களை அனுப்பி, அப்பகுதியை போக்குவரத்திற்கு ஏற்றவிதமாய் விடுதலைப் புலிகளைக் கொண்டே சுத்தப்படுத்தி, அதன் மூலம் தனது அடுத்தகட்ட இராணுவ நகர்வை மேற்கொள்ள சிங்களப்படை எடுத்த முயற்சி விடுதலைப் புலிகளிடத்தே சரிப்பட்டுவரவில்லை. இம்முறையும் சிங்களத்தின் திட்டம் தோல்வியில் முடிவடைந்தது.

இந்தப் போக்குவரத்துத்தடையால், வன்னிமக்கள் படும் துன்பம், வடக்கு கிழக்கில் மக்களின் மனங்களை உலுக்கின. மக்கள் சாத்வீக முறையில் போராட்டங்களை ஆரம்பித்தனர். வன்னியில் உள்ள மக்கள் போராட்டம் நடத்த, வவுனியா, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் என மக்கள் போராட்டம் விரிந்தது. பல்கலைக்கழக மாணவர்களும் போராட்டத்தில் குதித்தனர். பள்ளிச் சிறுவர்கள் மறியல் போராட்டம் நடத்தினர். வர்த்தகர்கள் கடையடைப்புச் செய்தனர். மக்கள் வீதியில் இறங்கி ஊர்வலங்கள் போயினர். அரசாங்க உத்தியோகத்தர்களும் அதிகாரிகளும்கூட போராட்டத்தில் இணைந்தனர். சந்திரிகா அரசின் மனித விரோதச் செயற்பாட்டைக் கண்டித்து, கொழும்பு கலைப்பீட மாணவர்கள்கூட போராட்டம் நடத்தினர் என்பதுடன், இப்போராட்டத்தில் சிங்கள மாணவர்களும் இணைந்துகொண்டனர் என்பது, நெருக்குதலின் புதிய பரிமாணம் ஒன்றின் தோற்றத்தை சிங்களத்திற்கு உணர்த்தியிருக்கக்கூடும்.

தமிழ் மக்களை பட்டினிபோட்டு பணியவைக்கவும், பாதைதிறப்பிற்கு நிபந்தனை போட்டு, இராணுவ நலனைப் பேண நினைத்தும், போக்குவரத்துப்பாதையை மூடிவைத்து சந்திரிகா அரசு போட்ட நாடகம், மக்களால் முறியடிக்கப்பட்டது. மக்களின் போராட்டச் சிறையில் சந்திரிகாஅரசு, நன்கு சிக்குண்டது.

உலகத்திற்குத் தோதாக சந்திரிகா அரசால் பொய்சொல்ல முடியவில்லை.

தானே போக்குவரத்துப் பாதையை மூடிக்கொண்டு, தானே நியாயமற்ற நிபந்தனையை விதித்துக்கொண்டு.. விடுதலைப் புலிகள் போக்குவரத்துப்பாதையை திறக்கச் சம்மதிக்கின்றார்கள் இல்லை என, திரும்பத்திரும்ப சிறீலங்காஅரசு கூறிக்கொண்டாலும், யாரும் ஏற்றுக்கொள்வதாக இல்லை. பாதையைத்திறந்து மக்களுக்கு விநியோகத்தை மேற்கொள்வதும், மக்கள் போக்குவரத்திற்கு வழியேற்படுத்தி விடுவதும் சிறீலங்கா அரசினது பொறுப்பு என்பதில், சந்திரிகா அரசைத் தவிர யாவருக்கும் ஒத்த கருத்தே இருந்தது.

தற்போது, தனது நிபந்தனையைச் சுருக்கிக்கொண்டு, சந்திரிகாஅரசு, போக்குரத்துப்பாதையை திறக்க ஒரு வழிக்கு வந்திருக்கின்றது. மாங்குளத்தில், ஐந்து கிலோ மீற்றருக்கு விடுதலைப் புலிகள் தமது நிலைகளை பின்தள்ளவேண்டும் என முன்னர் நிபந்தனை விதித்த சந்திரிகா அரசு, தற்போது இறங்கிவந்து, சில மீற்றர் தூரங்களுக்கு இருபகுதிகளும் தமது நிலைகளை பின்தள்ளி, யுத்த சூனியப்பிரதேசத்தை உருவாக்கி போக்குவரத்துப் பாதையைத் திறக்கலாம் என இணங்கியுள்ளது.

**சுப்பு**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# அவர்கள் வருவார்கள்

முல்லைக்கோணேஸ்

மடியும் ஒவ்வொரு நிமிடங்களிலும் பாதாளத்தின் நடுவே மெல்லிய கயிற்றில் தொங்கு வதானதொரு உணர்வையே தருகிறது. வாழ்வின் இழையங்கள் அறுந்து போனதாகவும் எதிலுமே பிடிப்பில்லாததான விசனமுற்ற நாட்களாகவுமே கழிகின்ற பொழுதுகள் தான் தொடருகிறது.

யாருடனும் கொஞ்ச நேரமாவது மகிழ்ச்சியுடன் பேசவே இயலாத இந்தப் பொழுதுகளில் இப்போதே மரித்துவிட வேண்டுமென்பதாய் மனசு அலைகிறது. நிம்மதியைத் தொலைத்த நீழும் இரவுகளில் சிலுவை சுமக்கும் கல்வாரிப்பயணமெனத் தைக்கிறது படுக்கை.

இப்படித் தூக்கத்துக்காய் கிடந்து தவிக்கும் போதெல்லாம் தொலைந்துபோன அந்த இனிமையான பொழுதுகள் தான் நினைவுக் குமிழ்களாய் நெஞ்சில் கசிகிறது.

ஏ.எல். பரீட்சை எடுத்துவிட்டு றிசல்ற்றுக்காகக் காத்திருந்த அந்த நாட்களில் சைக்கிள்களில் கூடிக் கூடித் திரிந்து களைத்துப்போனபோது கடலையும் பணங்கிழங்கும் வாங்கிக் கொண்டு வந்து நீண்டு நிமிர்ந்த அந்தப் பனைகளின் நடுவே வளைந்திருந்து சாப்பிடும் அலாதி சுகம் எப்போது எங்களை விட்டுப் போனது என்பதை இப்போதும் நினைத்துப் பார்க்கிறேன். களைத்துப்போகும் நெஞ்சில் இரத்தங் கசிவதாய் எங்கோ தாளாத வலிதான் ஏற்படுகிறது.

கிராமக்கோட்டுச் சந்திக்குப் போகும் மெயின் றோட்டில் இருந்து இருநூறு யார் தள்ளிக் கிடக்கும் வெட்டைவெளியில் வெயில் வெயிலாய் கிறிக்கற் ஆடியபடி சிறுவர்கள் குதூகலிப்பர். பனைகவின் கீழே விரிந்து போய்க்கிடக்கும் நிழலில் நாங்கள் ஒருவரை ஒருவர் கிண்டலடித்துக் கொண்டே நீண்ட நேரமாக உட்காந்திருப்போம். மாலை வரும் வரை யாரும் அந்த இடத்தைவிட்டு நகரவே முடியாதளவுக்கு சுவாரஷ்யமான விடயங்களெல்லாம் சம்பாசனைகளில் வந்து போகும்.

சீலன் தன் சினேகிதி பற்றி எந்த நேரமும் கதைத்துக் கொண்டேயிருப்பான். அவள் மீது தான் உயிரையே வைத்திருப்பதாகவும், அவளையே கல்யாணம் செய்து கொள்ள இருப்பதாகவும் கூறிக் கொண்டிருந்தான். பீற்றரின் கனவெல்லாம் விழுந்து போய்க் கிடக்கும் தனது குடும்பத்தின் பொருளாதாரத்தை உயர்த்துவதாகவே இருந்தது. என்னென்ன தொழில் செய்தால் முன்னேறலாம் என்பதை ஆலோசித்தபடியே இருப்பான். றிசல்ற்றைப் பார்த்துவிட்டு ஏதாவது சொந்தமாய் தொழில் தொடங்கப் போவதாக அவனுக்கு எண்ணம் இருந்தது. சுரேசிற்கு எந்த விதமான ஐடியாக்களே இல்லாமல் எதற்கெடுத்தாலும் சிரித்தபடியே இருப்பான் அப்பாவி.

ஆனால் பின்னாளில் கூட்டைப்பிய்த்தெறிந்து குருவிகள் கலைந்து, பிரிந்து போன மாதிரி எவ்வாறெல்லாம் ஒருவரையொருவர் அறியாத படிக்கு கண்காணாத தூரங்களில் எல்லாம் தொலைந்து போனார்கள்.

இப்போதும் அந்த வெளியில் அடித்த பந்தை எடுக்கச் சிறுவர்கள் ஓடுவதாகவும் கிராமக் கோட்டுச் சந்திக்குப்போகும் தெருவில் சந்தையால் போகும் கதிரேசு மாமா கள்ளுக் குடித்த உற்சாகத்தில் காத்தவராயன் பாட்டுப் பாடிக்கொண்டு போவது போலவும், கீக்கிறீக்... கீக்கிறீக் என்று அவரது சைக்கிள் சத்தம் காதில் ஒலிப்பதாகவுமே படுகிறது. மீணடும் மீண்டும் அந்தப் பனைகளும் அவற்றுக்காப்பால் விரியும் வெளியும் தான் ஞாபகத்தில் படர்கிறது.

இப்போது அந்தக் கிறிக்கற் சிறுவர்கள் எங்கெல்லாம் சிதறிப்போனார்களோ? அதில் எத்தனை பேர் காணாமல் போனோர் பட்டியலில் இடம் பிடித்தார்களோ?

எங்கள் ஊருக்கு இராணுவம் வந்த போது முதல் முதலில் அந்தப் பனைகளின் நடுவே தானாம் சென்றி போட்டு உட்காந்தது. பின் ஒவ்வொரு பனைகளாய்த் தறித்து பெரிய பண்டும் பங்கருக்கு அமைத்து நிரந்தரமாய் தன் இருப்பைப் பலப்படுத்தியபோது அந்த இராணுவ மினிமுகாமைச் சுற்றியிருந்த ஏராளமான வீடுகள் தரைமட்டமாக்கப்பட்டன.

இதைக் கேள்விப்பட்டதும் தாங்கள் சிறுகச் சிறுகச் சேமித்துக் கட்டிய வீடு இப்படிப்போனதே என்று அப்பா அதிர்ந்து போனார். அவரைப் பழைய நிலைக்குக் கொண்டு வருவதற்கு நாங்கள் ஏகப்பட்ட பிரயத்தனங்கள் செய்யவேண்டியிருந்தது.

வெளியில் உயிரை உறையவைக்கும் பீதியைத் தருவதாய் இருள் கவிந்து கிடக்கிறது. எங்கும் நிசப்தமே நிலவுகிறது. இந்த நாய்கள்கூட இப்போது குலைப்பதை நிறுத்திவிட்டனவோ என்றே நினைக்கத் தோன்றுகிறது. சரி இந்த வேப்பமரத்து வெளவால்கள் எங்கே போய் ஒளிந்து கொண்டன? முந்தியெண்டால் வேப்பம்பழக் காலத்துக்கு எங்கிருந்து தான் அப்படி வருகின்றனவோ, கொள்ளை கொள்ளையாய் வந்து மரத்தில் மொய்த்துக் கிடந்து கத்தலும் சடசடப்புமாகவே இரவிரவாகத் தொல்லைகள் கொடுப்பன.

இப்போது எங்கேயும் அவற்றின் அசுகைகூட தெரிவதில்லை. அதுகள் கூட எங்காவது தொலை தூரங்களுக்கு புலம்பெயர்ந்து போய்விட்டனவா? அல்லது யாருக்கும் ஓசைப்படாமல் வந்துதங்களின் கருமங்கள் முடித்துக் கொண்டு போய்விடுகின்றனவா?

எதுவுமே நிலையற்றதாகிப் போன துயர்தரும் வாழ்வு நாளைய இருத்தல் என்பது நிச்சயமில்லாத போது எதிலுமே லயிப்பற்ற ஜடமாகத்தானே நடமாட முடிகிறது.

முன்னரென்றால் எங்கள் ஊர் ஆழ்வார் கோயில் ஆவணி மாதத்தில் வரும்



கடைசி மூன்று தினங்களும் விடிய விடியத் திருவிழாவில் மூழ்கிக் கிடக்கும். சுற்றுப்புறமெல்லாம் ஒளிவெள்ளத்தில் பளிச்சிட பட்டுச் சாறிகள் மினுங்கும். நாலு முழவேட்டிகளோடு நாலைந்து பேராய் அந்த ஜன நெரிசலில் உலாவருவதே சுவர்க்க சுகம். அவ்வாறான ஒரு வருடத் திருவிழாவில் தான், மனேச்சற்ற மகள் வசந்தனோடு ஓடிப்போனாள். கனகம் மாமியின் மகளை வரணியில இருந்து வந்த மாப்பிள்ளை பகுதி இந்தத் திருவிழாவில் தானாம் பெண் பார்த்தார்கள். இன்னும் என்ன னென்னமோ சங்கதிகள் எல்லாம் அங்கு நடந்து முடியும்.



மூன்றாம் நாள் பொங்கல் வைத்துத் திருவிழா நிறைவெய்தும் போது மூன்று நாளும் இளசுகள் தாம் பரிமாறிக் கொண்ட பார்வைகளையும், பறிகொடுத்த மனசுகளையும் மீளப் பெறமுடியாத துயரங்களையும் மீட்டியவாறு வீடு நோக்கிப் போய்க்கொண்டிருப்பர்.

மூன்று நாளும் மாமிசம் உண்ணாது விரதமிருந்து பூசை முடித்த கனபேர் வெறும்மேலுடன் நேரே கள்ளுக்கடை நோக்கித் திருவிழாவில் நடந்த குற்றங் குறைகளைப்பற்றி கதைத்தவாறு நடப்பர். வீடு திரும்பும் போது மீனோ, இறைச்சியோ, பாசலோ கையில் இருக்கும். இன்னும் சிலர் வெறிச்சோடிப்போன வெளிமண்டபத்தில் இருந்து கூடிக் கதையளப்பர். சில வேளைகளில் அதில் ஐயரின் தலையும் தெரியும்.

இவையெல்லாம் எம்மை விட்டுப் போய் நெடுநாளாயிற்று.

எங்கு போனாலும் ஐந்து மணிக்குள் வீடு திரும்பும் அவசரம். ஒப்பாரி கேட்டால் உறவுக்காரரெண்டாலும் விடிந்த பின்பே துக்கம் விசாரிக்கும் துர்ப்பாக்கியம்.

இந்த முன்னிரவில் நிம்மதியற்றுத் தூக்கம் வரமறுக்கும். இந்த நிமிடங்களில் யாருமே அறிய முடியாதபடிக்கு என் ஜீவன் கதறுகிறது. ஊ..... ஊ...... என்றிரையும் காற்று பனையோலைகளில் பட்டு சரசரக்கிறது. இப்படி வீசும் இந்தக் காற்று மனித வெறியர்கள் குறிவைத்துக் காத்திருக்கும் அந்த முகாமினுள்ளும் உக்கிரமாய்ப் பெரும்புயலென அவர்களை அள்ளுண்டு, அடிபட்டு திணறடிக்கப் பண்ணுவதாய் வீசவேண்டுமென மனம் அவாவுகிறது.

இந்த இரவின் அந்தக் காரிருளில் அந்த முகாமினுள்ளே புகைபிடித்தவாறே குரூரம் கொப்பளிக்கும் தொனியில் ஏதாவது கதைத்தும் சிரித்தும் கொண்டே அவர்கள் இருப்பார்கள்.

சென்றியில் நிற்பவனின் துப்பாக்கி அப்பிராணியொருவனைத் தீர்த்துக் கட்டிய பெருமிதத்தில் ஓய்ந்துறங்கும் அல்லது யாரையாவது குறிவைத்தபடி வெடித்துச் சிதற இருக்கும் அந்தக் கொடூர கணநேரத்துக்காக காத்துக் கிடக்கும்.

இன்னும் உள்ளே கிருசாந்தியைப் போலோ ராஜினியைப் போலோ யாராவது அவர்களின் காம இச்சைக்கு கதறிக் கதறி தங்களை இழந்து கொண்டிருக்கலாம்.

இரண்டு நாட்களுக்கு முன்பும்கூட முகாமினுள்ளே யாரோ ஒருபெண் அலறும் சத்தம் கேட்டதாக ஊருக்குள் பேசிக் கொண்டார்கள். அந்த முகாமிற்கு அவர்கள் வந்த புதிதில் ஊரில் உள்ள சனங்களோடு மிகவும் பண்பாகவே நடந்து கொண்டதாகப் புளுகித் திரிந்தவர்களில் அனேகம் பேரினது உறவினர்கள் அவர்களைத் தேடி ஒரு நாளைக்குப் பல தடவை முகாமை நோக்கி அலைந்து திரிவது தான் மிகவும் மனவேதனையைத் தருகிறது. சனங்கள் அவர்கள் மேல் எவ்வளவு நம்பிக்கை கொண்டு நடந்தார்கள்.

உயிர் கரையும் இந்த ராத்திரியிலும் சென்றியில் இருந்தவாறு அந்தக் கொடிய விழிகள் யாரை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனவோ அவர்கள் இந்த இருளை ஊடறுத்துக் கிழித்தவாறோ இந்த இருளோடு இருளாய் கலந்தவாறோ வருவார்கள்.


அவர்களது வரவுக்காய், அந்த மீட்பாளர்களின் வருகைக்காய் இங்கு எத்தனை பேர் காத்துக் கிடக்கிறார்கள்.

அவர்கள் . வருவார்கள் என்கிற நினைவே நெஞ்சில் நிறைவைத் தருகின்றது.

www.tamilarangam.net



# கணப்பொழுது



## மேஜர் சுதர்சன் மாஸ்ரர்

ஆம் பெரியமடு அது அழகான ஒரு சிறிய கிராமம் வயல் வெளிகளும் ஆறுகளும் இயற்கை மரங்களும் நிறைந்த அந்தக் கிராமத்தில் சிவப்பிரகாசம் சரஸ்வதி தம்பதியினருக்கு இரண்டாவது பிள்ளையாக 1971ஆம் ஆண்டு தை மாதம் 13ஆம் திகதி இவன் பிறந்தான். இவனது குடும்பம் ஐந்து சகோதரர்களையும், நான்கு சகோதரிகளையும் கொண்ட பெரிய குடும்பம் இவனிற்கு தாய் தந்தை இட்ட பெயர் பத்மநாதன் இருந்தாலும் அனைவரும் இவனை பற்பு என்றே அழைத்து வந்தார்கள். இவன் தனது ஆரம்பக்கல்வியை பெரியமடு அரசினர் தமிழ்கலவன் பாடசாலையிலும் உயர்தரக்கல்வியை குடவிசுட்டான் சின்னடம்பன் பாடசாலையிலும் கற்றவன் பின் படிப்பை இடையில் நிறுத்திவிட்டு விவசாயம் செய்வதில் ஈடுபட்டான்.

அந்தக்காலம் தான் அந்நியன் எமது மண்ணை ஆக்கிரமித்துக் கொண்டிருந்த 1988ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் அந்தக் காலத்தில் சுற்றிவளைப்புக்களும் கைதுகளும் சித்திரவதைகளும் தொடர்ந்தன. எல்லாவற்றையும் பார்த்த அவனுக்கு சினமாக இருந்தது. நண்பர்களிடம் இனி இருந்து பிரயோசனம் இல்லை நாங்கள் எப்படியாவது போராடித்தான் ஆகவேண்டும் என்று கூறியவன், தனது ஊர் நண்பனான குஞ்சனுடன் சேர்ந்து 1989ஆம் ஆண்டு நடுப்பகுதியில் இயக்கத்தில் இணைகின்றான்.



இவனிற்கு இயக்கத்தில் வைக்கப்பட்ட பெயர் சுதர்சன் நண்பனுக்கு சங்கர் இருவரும் பயிற்சிப்பாசறையிலும் நண்பர்களாகவே இருந்தனர் பின் பயிற்சி முகாமில் பயிற்சியை முடித்துக்கொண்டு வெளியேறும்போது நண்பர்களான இருவரும் பிரிய வேண்டி வந்தது இவர்கள் இருவராலும் தாங்க முடியவில்லை அப்போது சங்கர் சொன்னான் நாம் எங்கிருந்தாலும் ஒரே தலைவர் ஒரே இலட்சியம் ஆகவே சந்தோசமாகப் பிரிவோம் பின் சந்தர்ப்பம் வரும் வேளை சந்திப்போம் என்றான். இதன் பின் சுதர்சன் வன்னி விசேட படையணிக்கு அனுப்பப்பட்டான் ஒரு வருடம் கழிந்தும் நண்பர்கள் இருவரும் சந்திக்கவில்லை அந்தக்காலத்தில் மாங்குள இராணுவமுகாமை புலிகள் திட்டமிட்டு தாக்கினர் இதில் சுதர்சன் முக்கிய பங்கு வகித்தான். இதன் பின் தலைவர் அவர்களால் சாள்ஸ் அன்ரனி என்னும் சிறப்புப்படையணி உருவாக்கப்பட்டது.

வன்னியிலிருந்து சென்ற போராளிகளில் சுதர்சனும் ஒருவன் அங்கு இவனது செயல்பாடுகளைக் கவனித்த தளபதி இவனை பதினைந்து பேர் கொண்ட அணிக்குப் பொறுப்பாளராக விட்டார் பின் நடந்த ஆகாயக் கடல் வெளிச்சமர் இன்னும் எத்தனையோ தாக்குதல்களில் திறமையாகச் செயல்பட்ட இவனுக்கு பின் 30 பேர் கொண்ட அணியொன்று கொடுக்கப்பட்டது. அந்தக்காலம் 1992 இறுதிப்பகுதி அந்தக்காலத்தில் புலிகள் திட்டமிட்டு யாழ். வளலாய்ப் பகுதியில் அமைந்திருந்த 150 காவலரண்களை தாக்க திட்டமிட்டனர். அதில் சுதர்சனின் பொறுப்பில் உள்ளவர்களுக்கு ஒரு பகுதிக்காவலரண் இவனுடைய அணி காவலரண்களை உடைத்துக் கொண்டு உள்நுழைவது என்பது திட்டம். தாக்குதலுக்கான நாளும் குறிக்கப்பட்டது. சுதர்சனின் அணி முதலாவது தடைக்குள் நுழைந்துவிட்டது. அப்போது சத்தம் கேட்க, எதிரி விழித்து விட்டான். இந்த நேரத்தில் தளபதியின் கட்டளை சுதர்சன் அடித்துக் கொண்டு இறங்கு என்றவுடன் சண்டை தொடங்கியது காவலரணை உடைத்துக் கொண்டு உள்நுழையும் அணிகளுடன் சென்ற சுதர்சனுக்கு வயிற்றிலும் கையிலும் ரவைகள் துளைக்க சுதர்சன் விழுந்தாலும் அவனது கட்டளைகள் உறுதியாக இருந்தது பின் இவன் மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லப்பட்டான்.

போராளிகள் வெற்றியோடு பாசறை திரும்பினார்கள் இவனது காயங்களும் மாறியவுடன் பயிற்சி ஆசிரியராக படிப்பதற்கு அனுப்பப்பட்டான் அவன் அங்கும் திறமையாகச் செயல்பட்டு வந்தான் பின் தலைவர் அவர்களால் பெயர் சூட்டப்பட்டு நடத்தப்பட்ட இதயபூமி 1இற்கு பயிற்சி அழித்ததும் மட்டுமின்றி சண்டைகளிலும் மிக முக்கிய பங்கு வகித்தான். இச் சண்டையிலும் எதிரியின் கைக்குண்டுத் தாக்குதலில் காயமடைந்தான். பின் காயத்தை மாற்றிக் கொண்டு தொடர்ந்து போராளிகளுக்கு பயிற்சி அழித்துக்கொண்டு வந்தான் அந்த நேரத்தில் தான் இவனது இதயத்தில் ஒரு துயரச்சம்பவம் இவனுடைய நண்பன் சங்கர் புலோப்பளைச்சமரில் லெப். சங்கராக வீரச்சாவடைந்து விட்டான் என்ற செய்தி மேலும் உறுதி எடுத்துக் கொண்டவன் தொடர்ந்து தனது பணியை செய்து வந்தான் இதன் பின் பூநகரிச்சமர் மண்டைதீவு புலிப்பாய்ச்சல் கொக்குத்தொடுவாய் முல்லைத்தீவு சத்ஜெய2 என்பனவற்றிற்கு பயிற்சி அழித்தது மட்டுமன்றி சண்டையிலும் திறமையாக செயல்பட்டான். சத்ஜெய 2 நடவடிக்கையின் போது குண்டுத் தாக்குதலில் இலக்காகி முதுகில் பெரும் காயமடைந்தான் காயம் மாறியபின்

தொடர்ந்து ஆனையிறவு பரந்தன் தாக்குதலுக்காக இரவு பகல் என்று இல்லாமல் போராளிகளுக்கு பயிற்சி அழித்து வந்தான்.

பின் தாக்குதல் திட்டம் தளபதியால் விளங்கப்படுத்தப்பட்டது இரண்டு முனைகளில் சண்டை என்பது திட்டம் பயிற்சிகள் அனைத்தையும் முடித்துக்கொண்டு சண்டைக்குத்தயார் நாளும் குறிக்கப்பட்டது 09.01.97 போராளிகள் இலக்கை நோக்கி நகர்கின்றனர் நேரம் நெருங்கி விட்டது சண்டை ஆட்லறித்தளத்தில் தொடங்கி விட்டது அடுத்தபகுதிப் பொறுப்பாளர் காயமடைந்ததால் நிலமை சரியாகத் தெரியவில்லை அந்த நேரத்தில் தளபதிகளின் கட்டளை சுதர்சனுக்குக் கிடைக்கிறது போய் அந்தப்பகுதியை உடைத்துக் கொண்டு உள் நுழை என்று உடனே சுதர்சன் தனது வோக்கியை கையில் எடுத்துக்கொன்டு பிரச்சனையில்லை நான் வந்து கொண்டிருக்கிறேன் என்று காயமடைந்த பொறுப்பாளருக்கு அறிவித்தபடி வேகமாக சென்று கொண்டிருக்கும் போது எதிரியின் எறிகணைச் சிதறலுக்கு கையிலும் காலிலும் காயமடைகின்றான்.

இருந்தாலும் இருகாயங்களையும் கட்டிக்கொண்டு தொடர்ந்து சென்ற போது தான் அந்தச் சம்பவம் நடந்தது தடையை உடைத்து உள்ளே செல்வேன் என்றவனின் நெஞ்சில் குண்டுபாய சுதர்சன் வீழ்ந்தான். வீழ்ந்தவனை தூக்கிச் சென்ற போராளிகளிடம் என்னமாதிரி மற்ற இடமெல்லாம் பிடிபட்டு விட்டதா என்று கேட்டவன் பதிலைக்கேட்கமுன் அந்தப்பரந்தன் மண்ணில் மேஜர் சுதர்சனாக வீரச்சாவை அணைத்துக்கொள்ள அவனது நெஞ்சில் இருந்து வடிந்த குருதி அவனது கையில் இருந்த வோக்கியை நனைத்துக்கொண்டு அந்த மண்ணில் உறைய அந்த மண் சிவப்பானது அந்த மண்ணை பற்றிய படி இவனது பாதையை நாமும் பற்றி நடக்கின்றோம்.

எழுதியவர்
போராளி - த.குமுதன்

## பெருமளவு...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கை வன்னிச் சமர்க் களத்தை சூடேற்றியது எனின் ஓயாத அலைகள் - 02, இந்தச் சமர்களத்தில் பெரும் திருப்பங்களுக்கு காரணமாகியதோடு, மோதல்களுக்கு ஒருவகை எல்லையிட்டுள்ளது என்றுகூடக் கூறலாம். ஆனால், எல்லை இடுதல் என்பது போர் நிறுத்தப் பட்டுள்ளது என்று அர்த்தப்பாடு கொண்டதல்ல. போரை நடத்த விரும்பும் இராணுவம் வரையறைகளுடன் கூடிய வகையிலேயே தமது செயற்பாட்டை மேற்கொள்ள முடியும் என்ற அர்த்தத்தின் பாற்பட்டதாகும்.

இந்த வகையில், மூன்றாம்கட்ட ஈழப் போரில் பெருமளவு இரத்தம் சிந்திவிட்ட முக்கிய மோதல்களமாகிய வன்னிப் போர்களமானது பெரும் மோதல்கள், அழிவுகளின் பின்னர் புதிய வரையறைகளுடன் அடுத்த கட்ட மோதல்களை எதிர்பார்த்துள்ளது. ஆயினும், ஜெயசிக்குறுய் நடவடிக்கை நிறுத்தத்துடன் இச் சமர்களத்தின் முதற்பாகம் முடிவுற்றுள்ளது. என்றே கூறலாம். இதில், சிறீலங்கா இராணுவம் எதிர்பார்த்த இலக்கை எட்ட முடியாது போனது மட்டுமல்ல, ஏற்பட்ட பெரும் இழப்புக்களினால் யுத்தத்திற்கான புதிய உள்வாங்கல்களை எதிர்பார்த்துள்ளதோடு, தயாரிப்புக்களிலும் ஈடுபட வேண்டி ஏற்பட்டுள்ளது.

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

## கடலன்னையின்...

போன்று ஆர்ப்பரித்த கடலைப்பார்த்து, 'ஏன் நாங்களெல்லாம் உனக்குப் பிள்ளையள் இல்லையோ? ஏன் எங்களை மட்டும் விட்டிருக்கிறாய்'

என்று, மனதுக்குள் கோபப்பட்டுக் கொண்டார்கள். ஆனால் அடுத்த நிமிடமே கோபம் மாறி,

'எங்கள் தோழிகள், தோழர்களையெல்லாம் சுமக்கின்றவள் இவள்தானே' என்ற எண்ணமே மேலோங்கியது. அங்கையற்கண்ணியின் நினைவு பாரமாய் அழுத்த, கனத்த இதயங்களோடு திரும்பினார்கள். காங்சேன்துறைக் கடற்பரப்பில் காற்றோடு கலந்த அங்கையற்கண்ணி ஒவ்வொரு போராளியினதும் குருதிச் சுற்றோட்டத்துடனும் கலந்து கொண்டாள். ஆழ் மனதிலே அழுத்தமாகப் பதிந்து கொண்டாள். இன்னும் இன்னும் கோடிக்கணக்கான நூற்றாண்டுகளுக்குப் பின்னரும் பேசப்படப் போகும் வரலாறாக ஆனாள்.

தீவுப் பகுதியைக் கைப்பற்றும் நோக்கில் இலங்கை இராணுவம் எடுத்த நடவடிக்கையின் ஒரு கட்டமாக வேலணையை ஆக்கிரமிக்க முயன்றபோது, தாய்க்கோழி தன் குஞ்சுகளைப் பருந்திடமிருந்து பாதுகாக்கவேண்டித் தன் சிறகுகளை விரித்து குஞ்சுகளை மூடிக்கொண்டது. இன்று அந்தக் குஞ்சு, பருந்தின் காலொன்றையே முறித்துப் போட்டுவிட்டது.

இந்திய வல்லாதிக்கத்தால் கேணல். கிட்டு அவர்களும், அவரின் தோழர்களும் வீரச்சாவை தழுவிக் கொண்ட நாளில் தன்னைப் புலியாகியவள் தன்னையும் சரித்திரமாக்கினாள்.

www.tamilarangam.net






## முதலாம் பாகம்
### அத்தியாயம் முப்பத்தொன்று

தொடர்ச்சி...

நாங்கள் பிள்ளைகளை பலிக்கடாக்கள் ஆக்குகிறோம் என வைற்ஹோல் முதலைக்கண்ணீர் வடிப்பதைக் கண்டு நான் வியப்படைகிறேன். எக்ஸோடசில் இருக்கும் ஒவ்வொரு பிள்ளையும் சுய விருப்பத்தின் பேரில் வந்தவர்கள் எக்ஸோடசில் இருக்கும் ஒவ்வொரு பிள்ளையும், ஹிட்லரிசத்தினால் அனாதையாக்கப்பட்டவர்கள். அதிகமாக ஒவ்வொரு பிள்ளையும் ஜெர்மனிய அல்லது பிரிட்டிஷ் தடுப்பு முகாங்களில் ஆறு வருடங்களுக்கு மேல் கழித்தவர்கள்.

வைற்ஹோல் இந்தப் பிள்ளைகளின் நலன்பற்றி இவ்வளவு கரிசனைப்பட்டால், நான் அவர்களைக் கராஓலொஸ் முகாம்களை, பத்திரிகையாளர்கள் பார்வையிடத் திறந்து விடும்படி சவால் விடுகிறேன். அவைகள் கிட்டத்தட்ட, சித்திரவதை — தடுப்பு முகாம்களைப் போன்றவையே. முள்ளுக் கம்பிகளுக்குப் பின்னால் இயந்திரத் துப்பாக்கி முனைகளில், உணவு, நீர் பற்றாக்குறை வைத்திய கவனிப்பின்மை நிலைகளில் மக்கள் வைக்கப் பட்டிருக்கிறார்கள். இந்த மக்களுக்கு எதிராகக் குற்றச்சாட்டு எதுவும் இல்லை. ஆயினும் பலவந்தமாக கராஓலொஸ்ஸில் தடுத்து வைக்கப்பட்டு இருக்கிறார்கள்.

பலஸ்தீனப் பிரச்சினையில், நியாயமில்லாத தீர்வொன்றுக்குத் தங்களை நாங்கள் வெருட்டி உட்படுத்த முயலுவதாகக் குற்றம் சாட்டுகிறார்கள். 60 இலட்சம் யூதர்களில் எஞ்சியிருக்கும் இரண்டரை இலட்சம் யூதர்கள் ஐரோப்பாவில் இருக்கிறார்கள்.

பிரிட்டிஷார் பலஸ்தீனத்துக்குள் அனுமதிக்கும் தொகை ஒரு மாதத்துக்கு ஆக எழுநூறு பேர்கள்தான். இதுதானா அவர்களுடைய நீதியான தீர்வு?

இறுதியாக, பலஸ்தீனத்தில் பிரிட்டிஷாருக்கு உள்ள உரிமை பற்றி வாதிக்க விரும்புகிறேன். ஹிட்லரிடம் இருந்து தப்பிப் பிழைத்தவர்களை விடக் கூடுதலாகப் பலஸ்தீனத்தில் அவர்களுக்கு உரிமை இருக்கிறதா? உங்களுக்கு ஒன்றை வாசித்துக்காட்ட அனுமதியுங்கள். என்று கூறிவிட்டு, சுக்கான் அறையின் மேசையின் மேலிருந்து ஒரு பைபிளை எடுத்து, எசக்கியேல் ஆகமத்தை (Ezekier) திறந்து பின்வரும் பகுதியை வாசித்தார்.

"இறைவனான கடவுள் பின்வருமாறு கூறினார். அவர்கள் சிதறி இருந்த மக்களிடையே இருந்து, யூதர்களைச் சேர்த்தெடுத்து நாடுகளின் கண்களில் அவர்களுக்கு கௌரவத்தை சம்பாதித்துக் கொடுத்தபின் நான் என் ஊழியனான யாக்கோப்புக்குக் கொடுத்த மண்ணில் அவர்கள் வாசம் செய்வார்கள். இங்குதான் உங்களுடைய மூதாதையர் வாழ்ந்தனர் அவர்களும் அவர்களின் பிள்ளைகளும், பிள்ளைகளின் பிள்ளைகளும் அங்கேயே வாழ்வார்கள்."

அரி பென்கானான் பைபிளைக் கீழே வைத்தார். வைற்ஹோவிலிருக்கும் கனவான்கள் தங்களின் உரிமைக் கோரிக்கைகளை பற்றி மீளாய்வு செய்வது நல்லது. மூவாயிரம் வருடங்களுக்கு முன், ஒரு உன்னதமான மனிதன், இன்னொரு அடக்கு முறையாளனுக்கு கூறிய அதே வார்த்தைகளை சொல்ல விரும்புகின்றேன்:

"எனது மக்களைப் போகவிடு" (Let my people go)

எனது மக்களைப் போகவிடு அறிக்கையை அனுப்பிய அடுத்த நாள், பிரிட்டிஷ் ட்ரக்குகளை எடுத்துப் பாவித்தது உட்பட கிடியோன் திட்டத்தின் உள்விபரங்களை அறிக்கையாக்கி வெளியிட்டான். பிரிட்டிஷ் கௌரவம் அதலபாதாளத்துக்குச் சென்றது. மார்க்கின் உபதேசப்படி மற்றப் பத்திரிகையாளரையும், அரி எக்ஸோடசில் ஏறிவர அனுமதித்தான். தொடர்ந்து அவர்கள் கராஓலொசுக்குள் தங்களை அனுமதிக்கும்படி கோரிக்கை எழுப்பத் தொடங்கினர்.

செசில் பிராட்ஷா விமர்சனத்தை எதிர் பார்த்திருந்தவர்தான் ஆனால் இந்த விஷயம் கிளம்பும் ஆரவாரத்தைச் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. கூட்டத்தைத் தொடர்ந்து கூட்டம் நடந்தது. இந்த நிமிடத்தில், உலகின் கண்கள் கைரேனியாத் துறைமுகத்திலேயே பதிந்திருந்தது. இப்போது எக்ஸோடசை செல்லவிட்டால் விடயம் பாரதூரமாகிவிடும்.

ஜெனரல் சேர். ரெவர் பிறவுண் ரகசியமாக சைப்பிரஸ் வந்து நிலையைக் கையேற்று ஏதாவது செய்ய முடியுமா என முயற்சித்துப்பார்த்தார்.

அவருடைய விமானம், அதிகாலை வேளையில் மிகுந்த பாதுகாப்பு நடவடிக்கைகளிடையே நிக்கோசியா விமானத் தளத்தில் வந்து இறங்கியது. மேஜர் அலிஸ்ரர் அவரை அங்கு சந்தித்தார். அவர்கள் இருவரும் விரைவாக, இராணுவ அதிகாரிகளின் கார் ஒன்றில் ஏறிக்கொள்ள அது அவர்களைச் சுமந்துகொண்டு பாமாகுஸ்ரா தலைமையகத்தை நோக்கிவிரைந்தது.

"நான் சுதர்லண்டிடம் இருந்து கையேற்கு முன் உன்னுடன் கதைக்க விரும்புகிறேன். அலிஸ்ரர். உன்னுடைய கடிதம் எனக்குக் கிடைத்தது. நீ சுதந்திரமாகக் கதைக்கலாம்."

"சேர், வேலைக்களைப்பு சுதர்லண்டை வீழ்த்திவிட்டது. அந்த மனிதருக்கு என்னவோ நிகழ்ந்திருக்கிறது. ஒரு பயங்கரக் கனவுக்குப் பிறகு, ஒரு பயங்கர கனவாக அவர் காண்பதாக கால்ட்வெல் எனக்குச் சொன்னார். அவர் முழு இரவும் விடியும் வரை நடந்து திரிவதோடு, பகலின் பெரும் பகுதியை பைபிளை வாசிப்பதில் செலவழிக்கிறார்."


"வெட்கக்கேடு" ரெவர் பிறவுண் சொன்னார். "புரூஸ் சுதர்லண்ட் ஒரு அருமையான போர் வீரனாயிருந்தான். இந்தக் காருக்குள் சொல்லப்பட்டது எதுவும் வெளியே தெரிய வராது என நம்புகிறேன்." என்றார் தொடர்ந்து.

"சரி சேர்" அலிஸ்ரர் பதிலிறுத்தார்.

கைரேனியா - சைப்பிரஸ் (ஏ.பி) பிரத்தியேகம்

பாலைவனப் புகழ் ஜெனரல் சேர் ரெவர் பிறவுண் நேற்று இரவு இரகசியமாக நிக்கோசியாவில் வந்திறங்கினார். சேர்.பிரவுண்சிலியன் ஆடைகளை அணிந்திருந்ததோடு, அவரது பயணமும் இரகசிய நடவடிக்கைகளில் மூழ்கியிருந்தது. சம்பவம் நடக்கும் இடத்தில், ரெவர் பிறவுணின் தோற்றம், எக்ஸோடஸ் பற்றிய வைற்ஹோலின் கவலையை ஊர்ஜிதப்படுத்துகிறது. அது தலைமை மாற்றத்தைக் குறிக்காவிட்டாலும், கொள்கை மாற்றத்தைக் குறிக்கலாம்.

மார்க் எக்ஸோடசுக்குப் போய் கரேனை செலுத்தும் அறைக்கு அனுப்பும்படி கேட்டான். அவன் நெருக்கடி மிகுந்திருந்த தளத்தில், வழி



**லியோன் யூறிஸ்**

தேடிக்கொண்டு செல்லும்போது மிகக் கவலையாக இருந்தாள். பிள்ளைகள் வதங்கிய (Gaunt) தோற்றத்தோடு இருந்தனர். உடலைக் கழுவுவதற்கு நீர் பற்றாக் குறையால், அவர்களில் துர்மணம் கமழ்ந்து கொண்டிருந்தது.

அரி, செலுத்தும் அறையில் எப்போதும் போலவே கலங்காது இருந்தான் மார்க். அவனிடம் சில சிகரெட்டுகளையும், சில பிராண்டிப் போத்தல்களையும் கொடுத்தான். "அங்கே எப்படிப் போகிறது?" அரி கேட்டான்.

"ரெவர் பிறவுண் வந்து சேர்ந்தால் கொள்கை எதுவும் மாறவில்லை. இந்தக் கதை இன்னமும் ஆரம்ப நிலையிலேயே எல்லாக் கட்டத்திலும் இருக்கிறது. நான் எதிர் பார்த்ததை விடப் பெரிதாகிவிட்டது. அரி, இங்கே பார் இது எனக்கும் உனக்கும் வேண்டிய விதத்தில் நிகழ்ந்தாகிவிட்டது. நீ செய்யத் தொடங்கியதைச் செய்து முடித்து விட்டாய். நீ பிரிட்டிஷாரின் கண்களைக்குத்திக் கறுப்பாக்கி விட்டாய். எனக்குக் கிடைத்த தகவலின் படி பிரிட்டிஷார் பின்வாங்கப் போவதில்லை."

"என்ன சொல்ல விரும்புகிறாய்?"

"இந்த விஷயத்தை நீ, மனிதாபிமான முறையில் செயல்படும் விதத்தில் கப்பலைக் கட்டும்தளத்துக்குக் கொண்டு போவதன் மூலம், சிகரம் வைத்தது போல் ஆக்கலாம். பிரிட்டிஷார் இவர்களைக் கராஓலொஸ்சுக்கு நடத்திக் கொண்டு செல்வதை வைத்து மிகப்பெரியளவு பிரச்சாரம் செய்யலாம். அது மக்கள் மனதைக் கிழித்தெறிந்து விடும்."

"இப்படிச் சொல்லச் சொல்லி கிற்றி சொல்லி அனுப்பினாளா?"

"சீ அப்படிச் சொல்லாதே. கீழே அந்தக் குழந்தைகளைப் பார். அவர்கள் தளரத் தொடங்கி விட்டார்கள்"

"அவர்களுக்கு இப்படி நிகழலாம் என்று அவர்களுக்குத் தெரியும்"

"இன்னொரு விஷயம் அரி, நாங்கள் இப்போ செய்திகளின் முக்கியமான இடத்தைப் பெற்றிருக்கிறோம். நாளை பிராங் சினட்ரா (Frank Sinatra - பிரபல அமெரிக்கப்பாடகர்) எங்காவது ஒரு மதுபானச்சாலையில் யாராவது ஒருவனுக்கு இடது கை முஷ்டியால் குத்திவிட்டால், நாம் முதலாம் பக்கத்திலிருந்து வீசப்பட்டு விடுவோம்."

இப்போ கரேன் செலுத்தும் அறையின் உள்ளே வந்து மென்மையாக "ஹலோ மிஸ்ரர் பார்க்கர்" என்றாள்.

"ஹலோ என் அன்பே, இதோ கிற்றியிடம் இருந்து ஒரு கடிதமும் ஒரு பார்சலும் கொண்டு வந்திருக்கின்றேன்"

அவள் கிற்றியின் கடிதத்தைப் பெற்றுக்கொண்டு, கிற்றிக்கு ஒரு கடிதத்தை மார்க்கிடம் கொடுத்தாள். பார்சலை மற்றைய பார்சல்களை எடுக்காமல் விட்டது போலவே வாங்காமல் விட்டுவிட்டாள்.

"கிறிஸ்துவே, அவள் பார்சலை வாங்கவில்லை என்று எப்படிக் கிற்றிக்குச் சொல்லுவேன். இந்தப் பிள்ளை நலமாக இல்லை. அவளுடைய கண்களைச் சுற்றி கருவளையங்களைக் கண்டாயா? இன்னும் சில நாட்களில் மிகுந்த சிரமப்படப் போகிறாய்"

"நாங்கள் பொது மக்கள் அபிப்பிராயத்தை தப்பவைத்துக் கொள்வதைப் பற்றிப் பேசுகிறோம். ஒன்றை மட்டும் தெரிந்து கொள் பார்க்கர். நாங்கள் கராஓலொசுக்குத் திரும்பிப் போகப்போவதில்லை. பதிலொன்றை எதிர்பார்த்து இரண்டரை இலட்சம் யூதர்கள் ஐரோப்பாவில் காத்திருக்கிறார்கள். அந்தப் பதிலைத் தரக்கூடியவர்கள் நாங்கள் மட்டும்தான். நாளை தொடங்கி உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை ஆரம்பிக்கப் போகிறோம். உணர்விழக்கும் எவரையும் பிரிட்டிஷார் பார்க்கக் கூடியதாக மேல் தளத்தில் கிடத்தி விடப் போகிறோம்."

"என்னை என்ன வேணுமென்றாலும் கூப்பிட்டுக்கொள் பார்க்கர், அநாதைச் சிறுவர்களின் கூட்டமொன்றை பட்டினி கிடக்கவிட நான் விரும்புவேன் என்று நினைக்கிறாயா? எனக்கு, இதைவிடப் போராடவேறு ஏதாவது கொடு எனக்கு அந்த டாங்கிளையும், நாசகாரிகளையும் தாக்க வேறு ஏதாவது கொடு எங்களுக்கு இருப்பதெல்லாம் எங்கள் மனத்துணிவும், நாங்கள் நம்புகின்றவைகளும் தான். இரண்டாயிரம் வருடங்களாக, எங்களை நொருக்கி வந்திருக்கிறார்கள். இந்த ஒரு போரில் மட்டுமாவது நாங்கள் வெல்லப்போகிறோம்."

தொடரும்...

www.tamilarangam.net



# இரு வாரத்துக்கு ஒருமுறை கடிதம் மூலம் சந்திப்போம்!

**அன்புச் சகோதரமே!**

சிறீலங்காப் பராளுமன்றத்தில் சந்திரிகா அரசாங்கம் ஆட்சிக்கு வந்து ஐந்து ஆண்டுகள் 16.08.99 உடன் பூர்த்தியாகின்றது. சந்திரிகா ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் தமிழர்களுக்கு செய்த பிழைகளினாலேயே யுத்தம் தோன்றியது நான் எனது அரசாங்கத்தில் யுத்தத்தை நிறுத்தி சமாதானத்தின் மூலம் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காணுவேன் என சமாதான உச்சாடனம் செய்து ஆட்சி பொறுப்பை ஏற்றவர் என்பதை இலங்கைத்தீவின் மக்கள் அனைவரும் அறிவர். சுருக்கமாக கூறினால் இலங்கைத் தீவின் அமைதிக்கும் பொருளாதார வளத்திற்கும் இனங்களுக்கு இடையிலான சமூக உறவுகளுக்கும் தடைக்கல்லாக விளங்கி வரும் பௌத்த சிங்கள பேரினவாதத்தின் தமிழின அழிப்பு உணர்வினால் 1983முதல் சிறிலங்காவால் தமிழ் மக்கள் மேல் நடாத்தப்பட்டு வரும் யுத்தத்தை நிறுத்தி பேச்சுவார்த்தைகள் மூலம் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காண சந்திரிகா முயலுவார் என்ற நம்பிக்கையினாலேயே சந்திரிகாவை மக்கள் பதவிக்கு கொண்டு வந்தனர்.

தமிழீழ மக்களின் அரசுநோக்கிய அரசாங்கத்தினரான தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு சிங்கள பௌத்த பேரினவாதத்தின் தமிழின அழிப்பு நோக்குகள் தெளிவாக தெரிந்த போதிலும் சந்திரிகாவின் தேர்தல் வாக்குறுதிகளை அவர் நிறைவேற்றுவதற்கு உரிய சூழ்நிலைகளை எந்த விதத்திலும் தமது நடவடிக்கைகள் பாதிக்காதவாறு நடந்து கொண்டதுடன் அவரது பேச்சுவார்த்தைக்கான முன்னாயத்த முயற்சிகளுக்கு ஊக்கமளிக்க கூடிய வகையில் யுத்தக் கைதிகளைக்கூட விடுதலை செய்து முன்மாதிரியாக விளங்கினர். இதன் மூலம் யுத்தத்தை நிறுத்தி சமாதானப் பேச்சுவார்த்தைகள் மூலம் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் என்ற மக்கள் விருப்புக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் முழு அளவிலான ஒத்துழைப்பை வழங்கினர்.

ஆனால் சந்திரிகா தனக்கு வாக்களித்த மக்கள் விருப்பினை நடைமுறைப்படுத்தாது பௌத்த சிங்கள பேரினவாதத்தின் விருப்புக்களை நடைமுறைப்படுத்தலையே தனது அரசாங்கத்தின் அரசியல் செயற்திட்டங்களாக வெளிப்படுத்தத் தொடங்கினார். இதன் முதல் கட்டமாக சிங்கள மக்களின் பிரதிநிதித்துவ அங்கீகாரமுள்ள தீர்மானங்களை மேற்கொள்ள அதிகாரம் உள்ளவர்களைப் பேச்சுவார்த்தைக்குரிய முன்னாயத்தங்களை செய்வதில் ஈடுபடுத்தாது சாதாரண அரசாங்க ஊழியர்கள் மூலம் பேச்சுவார்த்தை முன்னாயத்த நாடகம் ஒன்றை நடாத்திக் கொண்டு சிறீலங்கா இராணுவத்தின் நலன்களையும் பலத்தினையும் பெருக்கி கொள்வதற்கான கால அவகாசமாக மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தை பயன்படுத்தியதுடன் அக்கால கட்டத்தில் நிராயுதபாணியாக காணப்பட்ட தமிழீழ விடுதலைப்புலிப் போராளிகளை அழித்தொழிக்கும் ஈனச் செயல்களில் தனது படைகள் ஈடுபடுவதையும் அனுமதித்தார். தமிழ் மக்களுடைய நலன் பேணும் விருப்பு உள்ளவராக உதட்டளவில் தன்னை வெளிப்படுத்திய சந்திரிகா நடைமுறையில் தமிழ் மக்களையும் தமிழீழ விடுதலைப் புலிகளையும் தனிமைப்படுத்தல் என்ற இராணுவ நோக்கினை நடைமுறைப்படுத்த முயற்சித்தார். சந்திரிகா பொருளாதாரத் தடையிலுள்ள சில பொருட்களை நீக்கியுள்ளதாக அறிவிப்பு செய்த போதிலும் இவைகள் தமிழ் மக்களை சென்றடையாதவாறு அவரின் படைகள் அவற்றை சோதனைச் சாவடிகளில் தடுத்தன. புனர் நிர்மாண புனர் வாழ்வுக்கு நிதியொதுக்கீடு செய்வது போல் நடித்த சந்திரிகா புனர் வாழ்வு புனர் நிர்மாணத்திற்கான எதுவித கட்டளைகளையும் பிறப்பிக்கவும் இல்லை நடைமுறைப்படுத்தவும் இல்லை. தமிழீழ விடுதலைப் புலிகளால் மக்களின் தேசத்தின் தேவைகளை மையப்படுத்தி விஞ்ஞான அணுகுமுறையுடன் தயாரிக்கப்பட்ட பொருளாதார புனர் நிர்மாண புனர்வாழ்வு ஆவணம் (ERRT) பேச்சுவார்த்தை முன் முயற்சிகளின் பொழுது சந்திரிகா அரசாங்கத்திற்கு சமர்ப்பிக்கப் பட்ட போதும் அதனை நடைமுறைப்படுத்தாது அலட்சியம் செய்யப்பட்டது. இவைகளினால் சந்திரிகாவின் நோக்கு சமாதானம் என்ற கோஸத்தில் இராணுவ நடவடிக்கைகளுக்கான பலமான அடித்தளங்களை உருவாக்குதலே என்பது தெளிவாகியது.

ஆயினும் சந்திரிகாவின் சமாதான முயற்சியை இராணுவ நலன் பேணும் திட்டமாக கொண்டு செல்லும் போக்கை இனங்காட்டும் நோக்கில் காலஅவகாசம் விதித்து தமிழ் மக்களின் நாளாந்த வாழ்வுக்கு உயிரச்சுறுத்தலாக விளங்கிய பூநகரி இராணுவ முகாமை அகற்றும்படி விடுதலைப் புலிகள் கோரிக்கை விடுத்தனர். சந்திரிகா அதனை அலட்சியம் செய்து தமிழ் மக்கள் மீதான யுத்தம் ஒன்றை திணித்தார். இதனால் 1995 சித்திரை 19இல் சந்திரிகாவின் பேச்சுவார்த்தையை சமாதானத்தை இராணுவ நலன்களுக்குப் பயன்படுத்தும் திட்டம் முறிவடைந்தது. தனது இராணுவ நல போக்கு தடுக்கப்பட்டதைக் கண்ட சந்திரிகா தமிழ் மக்கள் மீதான பாரிய யுத்தத்தை சூரியக்கதிர் என்ற பெயரில் தொடர்ச்சியாக தொடக்கி வைத்தார். சமாதானத்திற்கான யுத்தம் என தனது ஆக்கிரமிப்பு முயற்சிக்கு நாக்கூசாது விளக்கமளித்த சந்திரிகா இந்தப் பரப்புரையை சர்வதேச நாடுகளிடையும் சர்வதேச மக்களிடையிலும் பரப்பி தமிழீழ மக்களுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் உள்ள சர்வதேச நன்மதிப்பை ஆதரவை அழிக்கும் பொறுப்பை கதிர்காமரிடம் கொடுத்தார். இரண்டு இராணுவ நோக்குகள் ஏககாலத்தில் சந்திரிகாவால் வேகப்படுத்தப்பட்டது. ஒன்று தமிழீழத்தாயகத்தின் உட்கட்டுமானங்களையும் தமிழீழ மக்களையும் இராணுவ நடவடிக்கைகள் மூலம் அழித்து தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தை ஒடுக்குவது. மற்றது தமிழீழ மக்களுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் கிடைக்கக் கூடிய புலம்பெயர் தமிழ் மக்களின் உதவிகளையும் சர்வதேச ஆதரவுகள் அனைத்தையும் தடுப்பது. வேறு விதமாக கூறுவதானால் உள்நாட்டிலும் வெளி நாட்டிலும் தமிழ் மக்களையும் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பையும் தனிமைப்படுத்தி தமிழீழ விடுதலைப் புலிகளை பலமிழக்கச் செய்வதன் மூலம் தமிழீழ மக்களை அடிமைப்படுத்துவது என்ற சிங்கள பௌத்த பேரினவாதத்தினை நடைமுறைப்படுத்தும் தலைமையாக சந்திரிகா செயற்பட்டார்.

இந்த இனவெறித் தன்மையினால் தமிழ் மக்களினை தனது படைகளின் மூலம் வதைக்க முற்பட்டார். வான் கடல் தரையில் இருந்து குண்டு மழைகளை அப்பாவித் தமிழ் மக்கள் மேல் சந்திரிகா அரசாங்கம் கொட்டியதால் 5,00,000 க்கும் மேற்பட்ட தமிழீழ மக்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வன்னி பிரதேசத்திற்கு பாதுகாப்பு தேடி இடம்பெயர வைத்தது. மக்களற்ற வெளியில் சிங்க கொடியேற்றி யாழ்ப்பாண அரசைத் தாம் மீளவும் கைப்பற்றியமைக்காக பட்டயம் எழுதி யானைத் தந்தத்தில் அதைப்பெற்று கொழும்பில் வெற்றி விழா கொண்டாடிய சந்திரிகா யுத்தத்தினை இலங்கைத் தீவு முழுவதற்கும் விரிவுபடுத்திக் கொண்டார்.

சிறீலங்கா படைகளின் சரமாரியான குண்டு தாக்குதல்களுக்கு முகங் கொடுக்க முடியாது பாதுகாப்பு தேடி வன்னிக்குப் புறப்பட்ட யாழ் குடா நாட்டு மக்களை தனது இராணுவ வல்லாதிக்கத்தால் மீளவும் குடாநாட்டுக்குள் தள்ளிச் சென்று அங்கு அவர்களை திறந்த வெளிக் காவலில் சிறை வைத்து அங்கு தனது இறைமையும் ஆட்சியும் மீண்டு விட்டதாக அன்று முதல் இன்று வரை உண்மைக்கு மாறான பரப்புரைகளைச் செய்து வருகிறார். பதிவு செய்யப்பட்ட காணமல் போக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 12546-ஐ எட்டிப்பிடித்ததை அடுத்து உலகில் கைதாக்கப்பட்டு காணாமல் போக்கப்பட்டவர்களை அதிகமாக கொண்ட நாடுகளின் எண்ணிக்கையில் இரண்டாவது இடத்தை சிறீலங்கா பெற்றுள்ளமை சந்திரிகா செய்து வரம் சமாதானப் படுகொலைகளுக்கு தலைசிறந்த உதாரணமாக உள்ளது.

யாழ் செம்மணியில் தமிழர்கள் உயிருடனும் கொல்லப்பட்டும் தனியாகவும் குடும்பமாகவும் புதைகுழிகளில் புதைக்கப்பட்ட உண்மைகள் வெளியாகி யாழ்குடா நாட்டில் காணாமல் போனதாக அறிவிக்கப்பட்டுள்ள 700 போரும் இப் புதைகுழிகளுள் புதைக்கப்பட்டிருக்கலாம் என்ற நியாயமான அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. பள்ளி மாணவர்கள் மேல் நாகர் கோவிலில் குண்டு வீசி இன அழிப்பு— நவாலி தேவாலயத்தில் சரணடையச் சொன்ன அகதிகள் மேல் குண்டு வீசி படுகொலை— தமிழ் பெண்கள் மாணவிகள் மேல் பாலியல் வன்முறைகளை சிறீலங்கா இராணுவமே செய்து அவர்களை கொன்று போடுதல் என எத்தனையோ மனிதக் கொடுமைகளின் ஊற்றாக விளங்கும் சந்திரிகா ஆட்சியில் சூரியக்கதிர் — சத்ஜெய — ஜெயசிக்குறுய் என்ற மூன்று பாரிய மரபு வழி யுத்தங்கள் சந்திரிகா அரசால் தொடர்ச்சியாக தொடுக்கப்பட்டும் தமிழீழ விடுதலைப் புலிகளை சந்திரிகாவால் எதுவும் செய்ய முடியவில்லை. முல்லைத்தீவு முகாம் கிளிநொச்சி முகாம் வீழ்ச்சிகள் முதல் எத்தனையோ இராணுவ சாதனைகள் சந்திரிகாவின் ஆட்சிக் காலத்தில் விடுதலைப் புலிகளால் நடாத்தப்பட்டு காட்டுக்குள் அவர்களை அனுப்பி விட்டோம் எனக் கொக்கரித்த சந்திரிகா அரசு அவர்களை தரையிலும் கடலிலும் வானிலும் கண்டு மிரளும் நிலை உருவாகியுள்ளது. யாழ்குடா நாட்டை கைப்பற்றி விட்டதாக மகிழ்ந்த சந்திரிகா இலங்கைத் தீவு முழுவதும் புலிகள் தாக்குதல்கள் நடாத்தும் வலிமையுடன் வீறு கொண்டு பாய்வதை கண்டு கதிகலங்கி போயுள்ளார்.

ஆனாலும் அப்பாவித் தமிழ் மக்களை இனஅழிப்பு இனத்துன்புறுத்தல் செய்வதன் மூலம் அவர்களின் பிரிக்கப்பட முடியாத அடிப்படை மனித உரிமையான சுயநிர்ணய உரிமை பிரயோகத்தினைத் தடுத்து நிறுத்தி அவர்களின் அரசியல் பணிவை ஆயுத முனையில் பெற்று தனது ஆக்கிரமிப்பினை சட்டபூர்வ இறைமையாக காட்டும் மனிதாயத்திற்கு எதிரான குற்றச் செயலை சந்திரிகா தனது அரசியல் செயற்திட்டமாக கொண்டு அதனை நிறைவேற்றும் கொடும்பணியில் தன் படைகளை ஈடுபடுத்தி வருகின்றார். இதனாலேயே உலக வரலாறே காணாத இராணுவக் கொடுமைகளை எமது தமிழீழ உடன் பிறப்புக்கள் அனுபவித்து வருகின்றன.

இந்நிலையில் சந்திரிகா அரசாங்கத்தின் அந்நியத் தன்மையை ஜனநாயக விரோதப் போக்கை இராணுவத் தீர்வை அரசியல் செயற்திட்டமாக கொண்டு தமிழீழப் பகுதிகள் முழவதிலும் இராணுவ ஆட்சி நடாத்தும் படுபாதகச் செயல்களை உலகிற்கு எடுத்துக் காட்ட வேண்டிய கடமையும் இந்தக் கொடுமைகளில் இருந்து எமது மக்களை விடுவிக்க தமிழீழ விடுதலைப் புலிகள் நடாத்தி வரும் தேசிய விடுதலைப் போராட்டத்தின் வெற்றிக்கு உதவவேண்டிய பொறுப்பும் புலம் பெயர் தமிழீழ மக்களாகிய எம்முடையன. எமது மக்களின் பாதுகாப்பான வாழ்வுக்கு அவர்களது தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆட்சி மலர எம்மால் இயன்றதை எல்லாம் விரைவாக செய்வதற்கு விடுதலைப் புலிகளின் சர்வதேச பணிமனைகளுடன் நம்மை நெருக்கமாக இணைத்துக் கொள்வோமாக!

**அன்பின் ஆசிரியர்**

**(12.08.1999)**


## பெருமளவு...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

மூடி மறைத்து தன்னை தக்கவைத்துக் கொள்ளவே முயல்கின்றார்.

### வெற்றிப்பாதையில் தமிழீழப் பெண்ணியம்.

தமிழீழப் பெண்களாகிய நாம் அடிமைத் தனத்திலிருந்து மீண்டு கொள்ள ஆயுதப் போராட்டத்தில் இறங்கியுள்ளோம். மேற்கத்தைய பெண்ணியத்தை பிரதிபண்ணும் சிலர் எம்மை விமர்சித்த போதும் பல நாடுகளும் தோல்வி கண்ட இலக்கில் நாம் வெற்றி நடை போடுகின்றோம். இதனையே எமது தேசியத் தலைவர் அவர்கள் குறிப்பிடும் பொழுது நீண்ட காலமாக வளர்ச்சி கண்ட நாடுகளில் தொடர்ச்சியாக நடந்து வந்த உரிமைப் போராட்டங்களின் பலாபலனாக பெண்ணினம் குறிப்பிடத்தக்க சில வெற்றிகளை மட்டும் ஈட்டிக் கொள்ள முடிந்தது. கல்வி வாய்ப்பும் தொழில் வாய்ப்பும் பெற்றுக்கொள்ள முடிந்தது. எனினும் இந்த நாடுகளில் பெண்ணின் பிரச்சனைகள் தீர்ந்தபாடில்லை. இங்கு பழைய பிரச்சனைகள் புதியவடிவங்களில் தோற்றம் பெற்றுக் கொண்டு வருகின்றன எனத் தெளிவாகக் குறிப்பிடுகின்றார். விடுதலைப்புலிகள் அமைப்பில் பெண்கள் மத்தியிலான கூட்டுறவும், அமைப்புக்குள்ளேயும் வெளியேயும் உள்ள ஆண்களின் புரிந்துணர்வும் ஒத்துழைப்பும் எமது சமுதாயத்தின் கருத்துநிலை மாறிவருகின்றது என்பதற்கான எடுத்துக் காட்டுக்களே ஆகும். ஆணாதிக்க ஒடுக்கு முறைகளுக்கு எதிரான போராட்டம் என்பது ஆண்களுக்கு எதிரான போராட்டமல்ல. இந்தச் சித்தாந்தப் போராட்டம் ஆண்களின் மன உலக மாற்றத்தை குறிக் கோளாகக் கொள்ளவேண்டும் எனத் தெளிவாகக் குறிப்பிடுகின்றார் எமது தேசியத் தலைவர் அவர்கள். உண்மையில் தமிழீழத்தில் பெண்ணியம் என்ற கருத்தியல் போராட்டம் வெல்லக் கூடியதொன்றாகவே இனம் காணப்பட்டுள்ளது.



www.tamilarangam.net



## எங்கள் கையில்

ஆகாயம் இன்றைக்கு எங்கள் கையில்
அண்ணன் படை நடக்கின்றது புதுநம்பிக்கையில்
ஓயாத அலைகளென்றும் ஓய்வதில்லை.
வேங்கை வீரம் என்றைக்குமே வீழ்ந்ததில்லை.
வெற்றியினி நிட்சயமாய் எமது கையில்
வெல்வோம் நாம் தமிழீழம் வெகுவிரைவில்.
வீழ்ந்த வீரர் கொள்கை என்றும் சாய்வதில்லை.
விடுதலைப் புலிகள் என்றும் தோற்பதுமில்லை
விரைந்து வந்து சேர்ந்திடுங்கள் புலிகளணியில்
மீண்டும் நாங்கள் ஒன்று சேர்வோம் எங்கள் மண்ணில்
வல்ல புலித் தலைவன் உண்டு எங்களுக்கு
வண்ணத் தமிழீழம் வரும் வெகுவிரைவிலே.

– யாழ்வீரன் –

## அழைப்பு

என்னுயிர் மக்களே ஏன் இந்தத் தயக்கம்
அந்நியன் படைகள் அட்டகாசம் செய்தழிக்க
ஏன் இந்த மயக்கம்
துணிந்திடுங்கள் உயிரை நினைத்து உறங்கிக்
கிடப்பதா
எம் மண்ணில் எதிரி உழாவி எம்
தலைமுறை இங்கழிய எம் கண்முன்னே
எதிரியின் கொடுமைகளைக் கண்டும்
ஏன் கொதிப்படையாது இருக்கின்றீர்கள்
மானத் தமிழன் மானத் தமிழன் என்று
மகுடம் சூட்டும் உனக்கு ஏனிந்த
எக்காளமிடும் சிங்களத்திற்கு சிரசடி
கொடுக்கத் தயங்குகின்றீர்கள்
ஈழமண்ணில் இரத்த ஆறு ஓடுகிறது
கைகட்டி நன்று கதையளக்கின்றாயே அன்று
வெள்ளையனுக்கு வன்னியின் என்று கேட்டாலே
வயிற்றோட்டம் வரும் இன்று சிங்களப் படைக்கு
பிரபா என்றால் பித்தல்லவா பிடித்துவிடுகிறது
சிந்தித்துப் பாருங்கள் சிரசைக் கொஞ்சம் தட்டுங்கள்
சிங்களத்தின் தலையுடைக்க சீறி எழுந்திடுங்கள்.

– குட்டிவிழியன்

## அடக்குமுறை

தம்மிருக்கை சேருமளவும்,
நம் மினத்துக்கு,
நல்ல பாம்பாய்,
படமெடுத்தாடுவார்.
இருக்கையிலேறி பறையடித்து,
உருவெடுத்தாடுவார்.
அப்பாவி ஏழைகளுக்கு உருவேத்தி,
போருக்கழைப்பார்.
தம்மணி செய்யும்,
செம்மணிக்கு மண்ணணைப்பார்.
மனித உரிமையை;
மழுப்பியடிப்பார்.
ஏழையின் வயிற்றையும்,
போருக்குத் தட்டுவார்.
மரமேறு கொடிபோய்,
வந்தேறு குடி என்பார்.
நாற்காலி ஆயுழிற்கு,
நரபலி எடுப்பார்.
ஆசனமிழந்து, பாரையும் ஓய,
உருமாறித் தன்னிலையடைவார்.
எதிரிருந்து குரைப்பார்.
உறுமுவார், ஊழையிடுவார்.
அம்மணியென்ன, எவ்வணிவரினும்
அவ்வணிசெய்யும் அடக்குமுறைதான்.

– வீ. பாஸ்கரன் –

## இன்னும் இன்னும்

வித்தாகி வித்தாகி வீழ்ந்து – புலி
புதுப்பரணி எழுதும் காலம்
செத்தாடா தமிழன் போனான் – இல்லை
செருக்களம் வந்து பாரேன்

முத்தான எங்கள் மண்ணின்
முகவரியைக் கிழித்து எறிந்து
நத்தை போல் நகர்ந்து வந்து – மண்ணை
நாசம் செய்ய நினைக்கும் பகையே!

வெள்ளையன் தரப்பாளை
வெறும் நிலத்தில் போட்டுப் படுத்து
தொல்லைகள் வேண்டாமென்று
தொலை தூரம் சென்றிருந்தோம்.
'செல்' லையா அடித்து எம்மை
சல்லடை ஆக்குகின்றாய்!

புதுப் பூக்கள் பச்சை இளம் தளிர்கள்
குதூகலம் பூண்டு அரும்பும் வசந்த காலம்
பூவும் பிஞ்சுமாகி புலிகள் அணிவகுத்து
புதுயுகம் படைக்கும் புரிந்து கொள்பகையே!

சாவுக்குப் பயந்து தமிழன்
வாழ்வையே தொலைப்பான் – என்றும்
காலுக்குள் வந்து வீழ்ந்து
கவிதைகள் படிப்பான் – என்றும் கனவுகள் காணாதே

'கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்'
என்றார்
எங்கள் மண்ணில் எறும்பு கூடஉன்னை அரிக்கும்

தங்கத் தலைவன் எங்கள் மண்ணில் இருக்கும் வரை
பொங்கும் அலையென புலிகள் படையணி
புறப்படும்
எங்கும் எரிமலை எழுந்து வெடிக்கும் – நீ
தங்கும் இடம் தேடி தவிப்பது உண்மை.

– ஏ.இராஜேந்திரகுமார்.

## பேசாப் பொது மறைகள்

அர்த்தம் வாழ்வினுக்கென்(று)
எழுதாத விதியதனை
செங்குருதியாலழித்துச்
சீரியதோர் புது விதியை
வாழ்க்கைக்கு வகுத்தவர்கள்.

பெற்றவரை அன்போடு
பேணி வளர்த்தவரை
உற்றவரை நண்பர்களை
ஊரைத் துறந்துலகில்
நற்றமிழ் ஈழமொன்றை
நயமுடன் விழைந்து நின்று
கொற்றவத் தலைவன் வழி
கொள்கைப் போர் புரிந்து வெல்ல,
ஆவியீறாயத்தனையும்
அதற்காக ஈந்தவர்கள்.

பாலைவனங்கள் செழிக்கப்
பாய்ந்திட்ட காவிரிகள்.
பாட்டிற்குள் பரணிக்குள்
கவிதை கட்டுரைக்குள்
காவியத்துள் ஓவியத்துள்
ஒன்றுள்ளும் அடங்காத
பேசாப் பொது மறை
பொருளாகி விரிபவர்கள்.

அறிவினுக்கெட்டிய
அர்த்தங்களுக்கப்பால்
அளவிட முடியாத
அதிசயமாய் இருப்பவர்கள்.
உலகத்தின் விழிகளினை
வியப்பால் விரித்தவர்கள்.
இதயத்தில் தசைகளாக
இருந்துறுதி தருபவர்கள்.

இவர்கள் சிந்திச் சென்ற
குருதி மை ஒற்றிக்கொண்டு
வரலாற்றின் எழுதுகோல்
வரைபடம் ஒன்றினையெழுதும்
நாள் வரையும் இவர் பணியை
தோள் கொடுத்து நாம் தொடர்வோம்.

–சூரியநிலா –